# ரெட்டி மலர்

உறவை வளர்ப்போம் உணர்வை காப்போம்

தமிழ் மாத இதழ்

REDDY MALAR, Tamil Monthly

| மலர் : XVIII | இதழ் : 3 | ஜூன் 2024 | விலை. ரூ.15/– |
| --- | --- | --- | --- |
| Vol. : XVIII | Issue No : 3 | JUNE 2024 | Price. Rs.15/ |


## Dr.V.ஜனார்த்தனம் அவர்களுக்கு சிறந்த மருத்துவர் விருது



## சதுரங்கப் போட்டியில் சாதனைப் படைத்து வரும் வீராங்கனை R.கீர்த்திஸ்ரீ ரெட்டி




## மணி மகுடம் சூட்டிய திருமதி.C.ரமாபிரபா விருப்ப ஓய்வு பெற்றார்



செய்தி உள்ளே..... 1

உறவை வளர்ப்போம்! உணர்வைக் காப்போம்!

என்றென்றும் உங்களுடன்

# ஹரிணி ஜுவல்லர்ஸ்







## தங்கநகை சேமிப்புத் திட்டத்தில் செய்கூலி, சேதாரம் இல்லை

64-A, 65, சிந்தாமணி பஜார், (அண்ணா சிலை அருகில்) திருச்சி - 2

**Cell: 0431-2704916, 81488 24916** e-mail: harinijewell2014@gmail.com

# ரெட்டி மலர்

நிறுவனர் :
"கல்வி காவலர்" கே.ரெங்கராஜன் (KRT)

மலர் : XVIII ஜூன் 2024 இதழ் : 3

வெளியீட்டாளர் : V. செல்வராஜூ
ஆசிரியர் : R. இராஜசேகரன்
கௌரவ ஆசிரியர் : R. புகழேந்திரன்
இணை ஆசிரியர்கள் : R. அன்பழகன்
P. ஜனார்த்தனம்
துணை ஆசிரியர்கள் : D. மணிவாசகன்
V. ஜெயக்குமார்
சட்ட ஆலோசகர் : R. பாபு B.A.,B.L.,

**விற்பனைப் பிரிவு மேலாளர்**
R. காமராஜ்

**விற்பனைப் பிரிவு நிர்வாகிகள்**
R. நந்தகுமார்
N. சுந்தரராஜூ
M. ஜெயபிரகாஷ்

**விளம்பரப் பிரிவு மேலாளர்கள்**
J. ஐயப்பன்
P. மோகன்

**விளம்பரப் பிரிவு நிர்வாகிகள்**
S. காமராஜ்
R. பார்த்திபன்
S. பூவேந்தரசு

**ஆலோசனைக் குழு**
L. தமிழரசன், சென்னை
திருமதி.தேவிமோகன்
S. மோகன், கோவை
N. பெரியசாமி, திருச்சி
R.V. செல்வகுமார், விளாத்திகுளம்
R. சண்முகைய்யா, RSR சிவகாசி
P. தாமோதரன், தாம்பரம்
M. கிருஷ்ணசாமி, சென்னை
T. ரவிச்சந்திரன், விழுப்புரம்
R.D. ராஜமுருகன், விருதுநகர்
S. சதீஷ்குமார், மதுரை (மோனிகா)
S. ராமராஜன், திண்டுக்கல்
K. சூரியகுமார், தஞ்சாவூர் மாவட்டம்

## இதழின் உள்ளே........


- ஆசிரியர் தலையங்கம் - 4
- நிறுவனத்தலைவர் மடல் - 5
- உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கைத் தொடர் - 6-8
- திருமதி.C.ரமாபிரபா அவர்கள் பணி ஓய்வு - 9-10
- Dr.V.ஜனார்த்தனம் சிறந்த மருத்துவர் விருது - 11-12
- திரு.வீ.செல்வராஜூ அவர்களுக்கு டாக்டர் பட்டம் - 13
- சங்க செய்திகள் - 14-17
- கண்டன குரல்களும் அமைச்சரின் விளக்கமும் - 18-19
- சதுரங்கப் போட்டியில் கீர்த்திஸ்ரீ ரெட்டி சாதனை - 20-21
- மாணவர் பகுதி - 22-23
- சங்க செய்திகள் - 24-25
- போதை அரக்கனை அழிப்போம் - 26-27
- ஆன்மீகப்பகுதி - 28-29
- விளம்பரம் - 30
- திருமணத் தகவல்கள் - 31-34


## அன்பான வாசகர்களே!

தபால் பெட்டி பகுதிக்கு உங்களின் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நிறையோ, குறையோ உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் அஞ்சலட்டையில் உங்களின் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். தன்னம்பிக்கை வரலாறு, சாதனையாளர்களின் வெற்றி செய்தி, கதைகள், கட்டுரைகள் மற்றும் ரெட்டியார் சமூக சங்க செய்திகளை எழுதி அனுப்பலாம். எங்களுக்கு வரும் மடல் மூலம் உங்களின் தேவை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறப்பான கட்டுரைகளை உங்களுக்குத் தரமுடியும். கடிதங்களை **ரெட்டி மலர்** அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

## அலுவலக முகவரி

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
: 044 - 2485 3333, 96888 77700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Matrimony Online Website :
www.reddymatrimony.co.in
Subscribe : YouTube : oprchannel
http://youtube.com/@oprchannel1157

# பூரண மதுவிலக்கு நேற்று, இன்று, நாளை

**தலையங்கம்**

இந்தியாவில் மதுவிலக்கு என்பது பீகார், குஜராத், மிசோராம், நாகாலாந்து மற்றும் யூனியன் பிரதேசமான லட்சத்தீவிலும் அமலில் உள்ளது. ஆனால் அண்மைகாலமாக பூரண மதுவிலக்கு என்ற குரல் தமிழகம் மட்டுமன்றி இந்தியா முழுவதுமே ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது. தேசிய அளவில் ஆண்டுக்கு 18 லட்சம் பேரின் உயிரையும், தமிழகத்தில் ஆண்டுக்கு 2 லட்சம் பேரின் உயிரையும் பறிக்கும் மதுவை முழுமையாக ஒழித்து மது இல்லாத தமிழகம் அமைய வேண்டும் என்பதே அனைவரின் அவா.

மதுப்பிரியர்கள் வெற்றியை கொண்டாடுதல், உடல்வலி, மன அழுத்தம், கடன்பிரச்சனை, காதலில் தோல்வி எனக்காரணங்களை கூறி பலரும் குடிப்பதுண்டு. மகிழ்ச்சியோ, துக்கமோ எதுவாக இருந்தாலும் மது முக்கிய பங்குவகிக்கிறது. கள்ளக்குறிச்சியில் நடந்த கள்ளச்சாராய மரணம் கூட அப்படி நிகழ்ந்ததுதான்.

நம் மக்களிடையே மதுக்கலாச்சாரம் அதிகரித்து வருகிறது. சிறுவயதினர் முதல் பெரியவர்கள் வரை எவ்வித கூச்சமோ, அச்சமோ இன்றி திறந்த வெளியிலேயே குடிக்கின்றனர். ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றால் மதுப்பழக்கம் உள்ளவர்கள் தனித்து ஒதுங்கி குடிக்கும் நிலைமாறி அப்பழக்கம் இல்லாதவர்கள் தனிமைப்படுத்தப்படும் நிலை தற்போது உருவாகியுள்ளது. எந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும் மது இருந்தால் மட்டுமே உற்சாகம் காணப்படுகிறது. பெற்ற பிள்ளைகளை, கட்டிய கணவனைப்பெண்கள் கட்டுப்படுத்தமுடிவதில்லை. மாறாக, யார் தான் குடிக்காமல் இருக்கிறார்கள் என தங்களுக்குள் சமாதானம் சொல்லிக் கொள்கிறார்கள்.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் 25 முதல் 35 வயதுக்குள் இளம் விதவைகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வழிப்பறி கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, சமூக விரோதச் செயல்கள் என அனைத்து குற்றப்பின்னணியிலும் மது முக்கிய பங்கு வகிக்கிறது.

மது குடிப்பதால் மூளை மற்றும் நரம்பு மண்டலம் பாதிப்புக்குள்ளாகிறது. கல்லீரல் பாதிக்கப்படுகிறது. புற்றுநோய், வாந்தி, மயக்கம், தலைசுற்றல் போன்றவை ஏற்படுகின்றன. அடிக்கடி மது அருந்துபவர்களுக்கு மனநோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது. கடன் வாங்கியாவது மது குடிப்பவர்கள் இன்றைய சமூகத்தில் ஏராளமானவர்கள் உள்ளனர்.

டாஸ்மாக் மது விலை அதிகம் என்று மலிவு விலையில் கிடைக்கும் கள்ளச்சாராயம் குடித்ததால் சென்ற ஆண்டு மரக்காணத்தில் 22 பேரும், அண்மையில் கள்ளக்குறிச்சியில் 60க்கும் அதிகமானோர் மரணமுற்றுள்ளனர்.

சாலை விபத்துகள் அதிகரிக்க அலட்சியத்தை காட்டிலும் மதுவே முக்கிய காரணம் என்பதை மறுக்க முடியாது. மதுப்பழக்கம் உள்ள இளைஞர்கள் இதனை சிந்திக்க வேண்டும். தாம் இல்லாத இந்த உலகத்தில் தம் மனைவி சந்திக்கப் போகும் பிரச்சனைகள், தம் குழந்தைகள் விரும்பும் கல்வி கிடைக்காத சூழல், தம் குழந்தைகள் தொழிலாளர்கள் ஆகும் நிலை என எத்தனையோ பிரச்சனைகள் ஏற்படும் என்பதை உணரவேண்டும்.

மது இல்லாத தமிழகமே மகிழ்ச்சியான தமிழகம். மாநிலத்தின் அனைத்துப்பகுதிகளிலும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட முடியவில்லை. ஆனால், மூலை முடுக்கெல்லாம் டாஸ்மாக் கடைகள் மூலம் மதுபானம் பெருக்கெடுத்து ஓடுகிறது. மதுப்பிரியர்கள் அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது. இது மிகவும் வேதனையளிக்கிறது. மதுவால் ஏற்படும் வியாதிகள் கடந்த 10 ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது.

அரசுக்கு வருவாயைப் பெருக்க எத்தனையோ வழிகள் உள்ளன. இன்றைய சூழ்நிலையில் தமிழகத்தில் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மதுவிலக்கு கொண்டுவருவதை விரும்பாது. மதுக்கடைகள் மூலம் அரசுக்கு வருவாய் வருவதை மட்டுமே கருத்தில் கொள்கின்றன. எனவே மத்திய அரசு தேசிய அளவில் மதுவிலக்குக் கொள்கையை அறிவிக்க வேண்டும். அதோடு மதுப்பழக்கத்துக்கு அடிமையானவர்களை மீட்க மறுவாழ்வு மையங்களை அமைக்கவேண்டும்.

அண்மை காலமாக தமிழகம் மது அடிமைகளின் இருப்பிடமாக மாறி வருகிறது. இனிவரும் தலைமுறை பாதுகாப்பான ஆரோக்கியமான, அமைதியான வாழ்வைப் பெற வேண்டும் என்பது அரசின் நோக்கம். அதற்கு மதுவிலக்கு படிப்படியாக அமல்படுத்தப்படும் என அரசு அறிவித்திருந்தாலும் அதற்கான சூழல் இல்லை. படிப்படியாக கடைகளை மூடினாலும் குடிப்பவர்களின் எண்ணிக்கை குறையவில்லை. ஒரு மதுகடையை மூடினால், மற்றக்கடையில் மது வாங்கி அருந்துகிறார்கள் என சட்டசபையில் மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்கள் தெரிவித்தார். அண்மையில் மதுவிலக்கு திருத்த சட்ட மசோதா சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. இம்மசோதாவின்படி கள்ளச்சாராயத்தை தயாரித்து விற்பவர்களுக்கு ஆயுள் தண்டனையும், ரூ.10 லட்சம் அபராதமும் விதிக்கப்படும். குற்றவாளிகள் பயன்படுத்தும் அசையும், அசையா சொத்துகள் பறிமுதல் செய்யப்படும் எனத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. மதுக்கடைகளை மூட வேண்டும் என்பதே அரசின் எண்ணம் என்றாலும் முற்றிலும் சாத்தியமா என்பது கேள்விக் குறியே.

மக்களிடையே இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய அவசியம் உள்ளது. கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவைகள் மூலம் மதுவால் ஏற்படும் தீமைகளையும், விளைவுகளையும் எடுத்துரைக்க வேண்டும். மது ஒழிப்பு சட்டங்களை கடுமையாக்க வேண்டும்.

பள்ளிகளில் பாடத் திட்டங்கள் வாயிலாக இளம் வயதிலேயே அவர்கள் மனதில் மது மீதான வெறுப்பினை வளர்க்க வேண்டும். இதனால் பிற்காலத்தில் மதுவை நாடாத மன உறுதியை பெறுவர். இந்த வெகுஜன இயக்கத்தில் முதலில் நாம் நடத்தும் சமுதாய அமைப்பு கூட்டங்களில் இதுக்குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு அல்லாமல் கூட்டாக உறுதிமொழி எடுத்துக்கொண்டு அதனை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்பதை ஒரு இலட்சியமாக கொள்ள வேண்டும்.

“குடி குடியைக் கெடுக்கும், குடி நாட்டுக்கும், வீட்டுக்கும் கேடு” என்பதை விளக்கும் வகையில் நாடகம், கதாகலாட்சேபம், பஜனை என பல வழிகளில் விழிப்புணர்வு பிரச்சாரத்தை முடக்கி விட்டவர் ஓமந்தூரார். அவர் வழியில் நின்று நாமும் மதுவை ஒழிக்க பிரச்சாரத்தை கையிலெடுப்போம்.

R. **இராஜசேகரன்** ஆசிரியர் குழு

# ரெட்டி இளைஞர் பேரவை

அலுவலக முகவரி : எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
044 - 2485 3333, 96888 77700. E-mail Id : reddymalar06@gmail.com
Website : www.reddymalar.com, Twitter : @malar_reddy.twitter.com, website : www.reddymatrimony.co.in




**V.செல்வராஜு**
**நிறுவனத்தலைவர்**

## நிறுவனத்தலைவர் மடல்.....

**அ**ன்பு உறவுகள் அனைவருக்கும் பணிவான வணக்கங்கள்.

**வி**டுமுறைக்காலம் முடிந்து பள்ளி மற்றும் கல்லூரிகள் தொடங்கியுள்ளன. ஒரு புதிய சூழலுக்கு மாணவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**பொ**றியியல் கல்லூரியில் சேர உள்ள மாணவர்கள் தங்கள் மதிப்பெண் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப துறைகளை தேர்ந்தெடுக்கவேண்டும். கலந்தாய்வுகளில் கல்லூரிகளைத் தேர்ந்தெடுக்கும் போது மாணவர்கள் மிகுந்த கவனமாக இருக்கவேண்டும், ஒரே பெயரில் பல கல்லூரிகள் இருக்கும் சூழலில் குழப்பங்களில் சிக்காமல் மற்றும் உரிய முன்னறிவினைப் பெற்று கலந்தாய்வை அணுக வேண்டும். எந்தத் துறையை எடுத்தாலும் அந்தத் துறை தொடர்புடைய பிற அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதற்கான உழைப்பை தர வேண்டும். பின்னாளில் போட்டித்தேர்வுகளை எதிர்கொள்ள இவை உதவியாக இருக்கும் என்பதை மனதில் கொள்ளவேண்டும். நம் பிள்ளைகள் கல்லூரி வாழ்வில் வெற்றிப் பெற வாழ்த்துகள்.

**க**டந்த 26.06.2024 அன்று சட்டப்பேரவையில் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் உயர் கல்வித் துறைக்கான மானியக்கோரிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாண்புமிகு அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் ரெட்டியார் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்தார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் அவர்கள் பதிலளித்து பேசும்போது, நமது ரெட்டியார் சமுதாயம் குறித்து சரியான தரவுகள் இல்லாமல் போகிறப் போக்கில் ரெட்டியார்கள் அனைவரும் ஹோட்டல் நடத்தி வசதியாக இருக்கிறார்கள் என்றும் ரெட்டியார் சமூகத்தவர்கள் மனம் புண்படும் வகையில் புறக்கணிப்பு வார்த்தைகளை கொண்டும் பேசினார்.

**இ**தனை சட்டப்பேரவை தலைவர் சபாநாயகர் மாண்புமிகு அப்பாவு அவர்கள் அமைச்சர் பதிலளிக்கும் போது மரியாதை குறைவாக யாரையும் பேசக்கூடாது என நாசுக்காக கண்டித்ததோடு அவர் பேசிய வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதாக அறிவித்தார். இந்த சட்டப்பேரவை நிகழ்வுகள் அனைத்தும் நேரலையில் ஒளிபரப்பாகி கொண்டிருந்தது. இதனைப்பார்த்த ரெட்டியார் சமுதாய மக்கள், சங்க நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் தங்களது மனக்குமுறலையும், மனக்கொந்தளிப்பையும் சமூகத்தளங்களில் வெளியிட்டனர். இந்த செய்தி சில மணி நேரங்களில் பெரும் கொந்தளிப்பாக உருவானது. அடுத்த 24 மணி நேரத்திற்குள்ளாகவே தமிழகம் முழுவதிலும் இருந்து பலர் கண்டனங்கள் தெரிவித்து போஸ்டர்கள் அடிப்பது, ஆர்ப்பாட்டங்களுக்கு தயாராவது, ஊடகங்கள் வழியாக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வது போன்ற செயல்பாடுகளில் தன்னெழுச்சியாக களம் காண முனைப்பு காட்டினர்.

**இ**ந்த சர்ச்சைக்குரிய அலட்சியமான பேச்சு தொடர்பாக மறுநாள் 27.06.2024 அன்று அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் தாமாக முன்வந்து சட்டப்பேரவையில் விளக்கமளித்து பேசுகையில், நான் ரெட்டியார் சமுதாயம் குறித்து பேசியதை தவறாக எடுத்துக்கொண்டுவிட்டனர். எந்த சமூகம் குறித்து தரக் குறைவாக பேசவில்லை. ரெட்டியார் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று வருவாய்த்துறை அமைச்சரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் கோரிக்கை வைத்ததை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று அவருடன் கலந்து பேசி அறிவிப்பு வெளியிடப்படும். நான் ரெட்டியார் சமுதாயம் குறித்து பேசியதாக, யாரும் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். ஜாதி, பேதமற்ற சமுதாயம் என்பதே அரசின் கொள்கை என பதிலளித்து பணிந்தார்.

**இ**ந்நிலையில், ரெட்டியார் சமூக ஆர்வலர்கள், சங்க நிர்வாகிகள் இவ்விஷயத்தில் தங்களுக்கு மன நிறைவு ஏற்படவில்லை என்றும், ஒன்றை சொல்லிவிட்டு அதன்பின் மழுப்பலாக அவையில் பதில் சொல்வதால் சரியாகி விடாது என தமது மனக்குமுறல்களை சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தி வருகின்றனர். நம்மை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கூடாது என்பதன் தீவிர வெளிப்பாடுதான் அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேச்சில் இருந்தது. அதனால்தான் அமைச்சர் தன் மனதில் இருந்ததை வார்த்தையாக வெளிப்படுத்தியிருக்கிறார். இல்லையென்றால் அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் கோரிக்கை வைத்தவுடன் உங்கள் கோரிக்கையை முதல்வரிடம் எடுத்துச்சொல்லி உரிய நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லி இருக்கலாம். அதுதான் நமக்கான வெற்றியாகவும், மகிழ்ச்சியையும் தந்திருக்கும் எனப் பலரும் வேதனையோடு தெரிவிக்கின்றனர். இந்த நிகழ்வு இன்னமும் இதயத்தில் ஆறாத வடுவாகவே உள்ளது.


**ரெ**ட்டியார் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று சட்டப்பேரவையில் கோரிக்கை வைத்த நம் அமைச்சர் பெருமக்களுக்கு ஒட்டுமொத்த ரெட்டியார் சமுதாய மக்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கோரிக்கையில் வெற்றிபெறும் வரை நாம் ஓர் அணியாக நிற்க வேண்டும் என்பதே என் அவா. கோரிக்கை வைத்த அமைச்சர் பெருமக்களை பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

**அ**டுத்த இதழில் சந்திப்போம். நன்றி.

என்றென்றும் சமுதாய உணர்வுடன்,
**V. செல்வராஜ்**

# உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கைத்தொடர்

**தொடர் – 22**



## சத்திய ஞானசபைப் பணி

1951-ல் சத்திய ஞானசபைத் திருப்பணி திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளால் செய்து முடிக்கப்பெற்றது. அதை முடிப்பதிலும் பின்னர் குடநீராட்டு நடத்துவதிலும் எத்தனையோ சிக்கல்கள் எழுந்தன. ஓ.பி.ஆர் அந்தச் சிக்கல்களையெல்லாம் அறுத்து திருப்பணியும் விழாவும் இனிது நடக்க உதவினார்.

பின்னர் வாரியார் ஞானசபைத் திருப்பணி செய்தபோது சத்திய ஞானசபையின் மேற்கூரை அமைப்பு மாறி விட்டது என்றும் அதை வள்ளலார் அமைத்தது போலவே மாற்றி அமைக்க வேண்டும் என்றும் சன்மார்க்க அன்பர்கள் கருதினர். மேலும் ஞானசபை முன் மண்டபமும், அதன் கூரையும் அதிக மழையின் போது ஒழுக ஆரம்பித்ததால், அவற்றையும் சரிசெய்ய வேண்டியதாயிற்று. அதற்காகப்புதிய திருப்பணிக்குழு ஒன்று திரு.நா.மகாலிங்கம் தலைமையில் 1967இல் ஓமந்தூரார் முன்னிலையில் அமைக்கப்பெற்றது.

சன்மார்க்க அன்பர்களைக் கொண்ட இந்த ஞானசபைத் திருப்பணிக் குழு மூன்று ஆண்டுகள் அடிக்கடி கூடி சத்திய ஞானசபையின் பல வரை படங்களைக் கவனமாகப் பரிசீலித்தது. முடிவில் வள்ளலார் அமைத்த சத்திய ஞானசபையின் அமைப்பின்படி இருந்த ஒரு வரைபடத்தை ஏற்றுக் கொண்டு சத்திய ஞான சபைக்குத் திருப்பணி செய்ய வேண்டிய முறைகளை வகுத்தது.

மீண்டும் சத்திய ஞானசபை திருப்பணி செய்யப்பெறுவதை ஓ.பி.ஆர். வரவேற்று மகிழ்ந்து அவ்வப்போது ஆலோசனை கூறி வந்தார். ஆனால் அது நிறைவேறும் வரை உயிர்வாழும் பேறு அவருக்கு இல்லாமல் போயிற்று.

1970ம் ஆண்டில் ஞானசபைத் திருப்பணிக் குழு திருப்பணி வேலையைத்தொடங்கியது. திரு.கொண்டாரெட்டியார் வழங்கிய அறுபதாயிரம் ரூபாய், முதல் நன்கொடையுடன் ஞானசபைத் திருப்பணி தொடங்கிற்று.

இந்தத்திருப்பணிக்கு அருள்மிகு பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானம் 10,000 ரூபாயும், திரு.நா.மகாலிங்கம் மூன்று லட்ச ரூபாயும், திரு.வி.எஸ்.தியாகராஜ முதலியார் 50,000 ரூபாயும், திரு.மருதைப்பிள்ளை 30,000 ரூபாயும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை 15,000 ரூபாயும், திரு.வி.எஸ்.பெருமாள் பிள்ளை, திருமதி. பி.சியாமலம்மையாள் ஆகியோர் 7,500 ரூபாயும், திருமதி.சாவித்திரி அம்மாள் 5,000 ரூபாயும் நன்கொடை அளித்தார்கள்.

சென்னையில் உள்ள இராஜதானி சங்கத்தார் வடலூர் ஜோதி தரிசனத்துக்கு வரும் மக்களின் தண்ணீர் தேவையைத்தீர்த்து வைப்பதற்காக குழாய் கிணறு இறக்குவதற்கு ஐம்பதினாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினர்.

தமிழக மக்கள் ஒரு ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரையில் இலட்சக்கணக்கான ரூபாய் நன்கொடை வழங்கினர்.

இந்த நன்கொடைகளைக் கொண்டு சுமார் ஏழு இலட்சம் ரூபாய்ச் செலவில், வேலை முடிவடைந்தது. ஞான சபைத் திருப்பணி விழாவும், புதுப்பிக்கப்பெற்ற ஞானசபையில் ஜோதி தரிசனமும் 1975 ஜூன் 19ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்தன.

கங்கை, யமுனை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வங்கக்கடல், அரபிக்கடல், கருங்குழி ஓடை, தருமச்சாலைக் கிணறு ஆகிய ஒன்பது புனித இடங்களிலிருந்து தீர்த்தங்களைக் கொண்டு வந்து ஜூன் 12-18 வரை ஏழுநாட்களும் நடைபெற்ற கோடி அர்ச்சனையில் வைத்துக் கடைசியில் 19ம் தேதி அன்று அந்தத் தீர்த்தங்கள் சத்திய ஞான சபைக்கும்பத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்டன.

## முதுமை

வடலூரில் தாம் அமைத்த நான்கு நிலையங்களையும் ஓமந்தூரார் 1951 முதல் 1969 வரை தாமே நிர்வகித்து வந்தார்.

அளவு கடந்த உழைப்பின் காரணமாக அவருடைய உடல்நிலை குன்றியது. அந்தச் சூழ்நிலையில் நிறுவனங்களைத்தக்கவர் ஒருவரிடம் ஒப்புவிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு 11.06.1969ல் தமது நிறுவனங்களைப் பொள்ளாச்சி தொழிலதிபர், காந்தியச் செல்வர் திரு.நா.மகாலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார்.

## சேறும் சந்தனமும்

ஓ.பி.ஆர் காலமாவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆனந்த விகடன் வார இதழ், தென்னார்க்காடு மாவட்ட இதழ் ஒன்றை வெளியிட்டது. அதில் “ஒதுங்கி வாழும் ஓ.பி.ஆர்” என்ற தலைப்பில் பின்வரும் கட்டுரை இடம்பெற்றது. அது வடலூர் இராமலிங்க அடிகளின் மடத்திற்கு எதிரே சற்று தள்ளி நிழல் பூத்துக்குலுங்கும் சிறிய பங்களா, மாடியில் ஒரு நாற்காலியில் கைகளைக் கோர்த்தபடி வானத்தை வெறித்துப்பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறார் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓ.பி.ஆர். எழுபத்தைந்து வயதின் முதுமைப் பருவத்தில் இருக்கிறார் அவர். அவரைச் சுற்றிலும் மத சம்பந்தமான பல புத்தகங்கள்....

ஏன், ஓமந்தூரை விட்டு இங்கே வந்து விட்டீர்கள்?

“அங்கே ஒரேதொல்லையாக இருந்தது. இங்கே வந்தேன். இங்கும் தொல்லைகள் விட்ட பாடில்லை”.

மனைவியும், ஒரு மகனும் மறைந்த பிறகு முனிவர் போல ஓமந்தூரை விட்டு கிளம்பி விட்டார். 1951ல் தான் வடலூர் வந்து, வள்ளலார் குருகுலப் பள்ளியை ஆரம்பித்திருக்கிறார். இந்தப் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.ஸி வரை வகுப்புகள் இருக்கின்றன. அதோடு பதினைந்து அநாதைக் குழந்தைகளையும் அப்பர் அநாதை இல்லத்தில், தந்தையாக இருந்து வளர்க்கிறார். இந்த இல்லத்திற்கு கிட்டத்தட்ட பத்து இலட்ச ரூபாய் சொத்து சேர்த்து வைத்திருக்கிறார். ஓமந்தூரார்

இவருக்கு நடந்த மணி விழாவில், அறுபத்து மூவாயிரம் ரூபாய் கிடைத்தது. அதையும் இந்தப் பள்ளிக்கே கொடுத்துவிட்டார்.

“சான்றோர் இல்லம் என்ற ஒன்றையும் நடத்துகிறேன். சான்றோர்கள் மட்டுமே இங்கே தங்கி அமைதியான சூழ்நிலையில் வசித்து தியானத்தில் ஈடுபடலாம். ஆனால் சான்றோர் மட்டும் வருவதில்லை....” என்றார் ஓ.பி.ஆர்.

திடீரென்று எதிரே இருக்கும் நண்பர் ஒருவர் உங்களுக்கு பிரம்மதேசம் ஜானகிராமய்யரைத் தெரியுமா? அவர் பேரன் நான்...” என்கிறார். ரெட்டியார் அவர்களுக்கு சட்டென்று ஜானகி ராமய்யரை நினைவிற்கு வந்து விடுகிறது. நல்ல ஞாபக சக்தி அவருக்கு “ஜானகிராமய்யருக்கு இப்போது எண்பது வயது இருக்குமோ? நீங்கள் எல்லாம் ஏதாவது உதவி செய்கிறீர்களா? இல்லை, நட்டாற்றில் விட்டுவிட்டீர்களா?” என்று பதட்டத்துடன் கேட்கிறார் அவர்.

அவருக்கு, சதாபிஷேகம் கூட கொண்டாடப் போகிறோம்” என்றார் நண்பர்.

அந்த விழாவெல்லாம் வேண்டாம். செலவு காட்டிவிட்டு பேசாமல் போய்விடுவீர்கள். அதற்காக மொத்த பணத்தையும் அவரிடம் கொடுத்து விடுங்கள். அரசியலில் விழா நடத்துவது மாதிரி செய்யவேண்டாம் என்றார் உத்தமர் முதலமைச்சர்.

ஏன் அரசியல் மீது அவ்வளவு வெறுப்பு என்று கேட்டால், அரசியல் ஒரு சகதி அதில் சிக்கினால் சேறு தான் பூசிக்கொள்ள வேண்டியிருக்கும். நானும் பூசிக்கொண்டவன் தான். ஆனால் அப்போது அதை சந்தனம் என்று நினைத்தேன் என்றார் ஓ.பி.ஆர்.

### மாற்றான் தோட்டம்

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்பதைச் செடிகள் பல வைத்து வளர்த்த ஓ.பி.ஆர். நன்றாக உணர்ந்தவர்.

காமராஜருக்கும், ஓ.பி.ஆருக்கும் அரசாங்க நிர்வாக முறை குறித்தும், அரசியல் கொள்கைகள் பற்றியும் ஆயிரம் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தன. எனினும் தமிழ்நாட்டில் குறிப்பிட்டதொரு சிறுபகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட காமராஜர் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றியடைந்ததை ஓமந்தூரார் பாராட்டினார்.

### நிறைவேறாத ஆசை

ஓமந்தூரார் தாம் முதலமைச்சராக இருந்தபோது அசைவ உணவு வழங்கப்படுகிற இடம் என்பதற்காக இராஜபவனத்து விருந்துகளுக்குச் செல்லுவதைத் தவிர்த்தார்.

சாரநாத்திலும், புத்தகயாவிலும் கருணை, கொல்லாமை என்ற கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள் மட்டுமே வாழ்கின்றனர். இவ்வாறே வடலூர்ப் பகுதியும் உயிர்க்கொலை தவிர்த்த பகுதியாகச் சட்டப்பூர்வமாக ஆக்கப்பட வேண்டும் என்று அவரும் திரு.நா.மகாலிங்கமும் விரும்பி, அதற்கான முயற்சியைப் பற்றியும் விவரித்து வந்தனர்.

உலகின் அறிவைக் கவர்ந்து உயர்த்தும் வகையில் வடலூர் ஞானசபைப் பெருவெளியில் ஆராய்ச்சி அரங்கங்களும், நூல் நிலையங்களும், தியான மண்டபங்களும் அமைய வேண்டும். இவைகளைச் செம்மையாகச் செயல்படுத்தவும் வேண்டும் என்று ஓமந்தூரார் திரு.நா.மகாலிங்கம் அவர்களிடம் அடிக்கடி கூறுவார்.

### ஆராய்ச்சி மனப்பான்மை

ஓமந்தூரார் பட்டப்படிப்பு வரை முறையாகப் படித்து அறிவியல் பாடங்களைப் பயின்றிருப்பாரே யானால் நம் நாட்டின் சிறந்த அறிவியல் மேதைகளுள் ஒருவராக இருந்திருப்பார். நாம் இவ்வாறு சொல்வதற்கு காரணம் உண்டு.

இக்காலத்தில் திரைப்படங்களைப் பார்ப்பவர்கள், ஒரு படத்தை ஏற்கனவே பார்த்தவர்களிடம் கருத்துக் கேட்கிறார்கள். படம் நன்றாக இல்லை என்று அவர்கள் சொன்ன பிறகும் தாங்கள் போய்ப் பார்த்து, அதன் பிறகு, ஆம் நன்றாக இல்லை தான் என்று சொல்வார்கள்.

அதுபோல, அறிவியல் துறைகளில் ஓமந்தூராருக்கு அக்கறை இருந்தது. அதை ஆங்கிலத்தில் Academic Interest என்று சொல்வார்கள்.

ஓ.பி.ஆர் இரசவாதம் (தங்கத்தைச் செயற்கை முறையில் செய்வது, செம்பைப் பொன்னாக்குவது) என்பது மெய்யா? பொய்யா? என்ற சோதனைகளில் ஈடுபட்டார்.

காயகல்ப ஆராய்ச்சி செய்து பார்த்து அது பொய் என்று விட்டுவிட்டார்.

### அன்றாட வாழ்க்கை

மாணவர் இல்லத்தில் இருந்து கொண்டு ஓ.பி.ஆருக்கு அருள் தொண்டு புரிந்து குருகுலம் உயர்நிலைப்பள்ளில் படித்து அப்பள்ளிலேயே ஆசிரியராகப் பணியாற்றும் திரு.எஸ்.சுந்தரமூர்த்தி இவருடைய அன்றாட வாழ்க்கையைப் பின்வருமாறு விவரிக்கின்றார்.

அவரது தினசரி வாழ்க்கையை விவரித்தால் அவரது குணநலன்களை முற்றிலும் அறியலாம். காலையில் 5 மணிக்கு எழுந்து அவரே ஹீட்டர் சுவிட்சை போட்டுவிட்டு தண்ணீர் சுட்டதும் “ஆப்” செய்து விடுவார். பின்பு ‘பயலே’ என்று அழைப்பார். நான் போய் வெந்நீர் பதம் செய்து குளிக்க எடுத்து வைப்பேன். சற்று சூடாகவே தண்ணீர் உபயோகிப்பார். குளித்தபின் காலை 7 மணி வரை பூஜை செய்வார். அதன்பின் நிலையக் கணக்குகள், மற்ற வேலை விவரங்கள் அனைத்தையும் அந்தந்த சிப்பந்திகளை அழைத்து விசாரிப்பார். பின்பு 9 மணிக்கு கோதுமை மாவுக் கஞ்சி. அது கோதுமை மாவும் நாட்டுச்சர்க்கரையும் கலந்து இருக்கும் நீர்ம நிலை உணவு ஆகும். பின் 11 மணி வரை தபால் பார்ப்பார். கடிதங்களுக்கும் பதில் எழுதுவார். நாளிதழ், மற்ற சஞ்சிகைகள் புத்தகங்கள் இவற்றைப் படிப்பார். பகல் 12.30க்கு பகல் உணவு அருந்துவார். கைக்குத்தலரிசியை, கஞ்சி வடிக்காமல் பொங்க வேண்டும். அதில் கேரட் துண்டுகள், பீட்ரூட் துண்டுகள், கோஸ் துண்டுகள், பச்சைப்பட்டாணி இவைகளையும் சேர்த்து ஒன்றாகப் பொங்கிவிட வேண்டும். இதில் சாம்பார், இரசம் போன்றவற்றை உபயோகிப்பார். புளி, மிளகாய் இவைகளுக்குப் பதில் எலுமிச்சைச் சாறு,

மிளகு இவைகளைத்தான் சாம்பார், இரசம் இவைகளில் போடவேண்டும். (நெல்லிக்காய் பச்சடி தினமும் இருக்க வேண்டும். நெல்லிக்காய் காய்க்கும் நாட்களில் அதை அவித்து கொட்டை நீக்கி பின் அரைத்து வடைபோல் தட்டி காய வைத்துது வருடம் முழுவதும் தினம் ஒன்றாக உபயோகிப்பார். மதிய உணவிற்குப் பின் பிற்பகல் 3 மணி வரை ஓய்வு எடுப்பார். 4 மணிக்குத் தோட்டங்களைச்சுற்றிப் பார்க்க புறப்படுவார். 5 மணிக்கு மாலை நேர பூஜைக்குச் சென்று இரவு 8 மணிக்கு முடிப்பார். இரவு உணவாக ஒன்று அல்லது ஒன்றறை சப்பாத்தி சாப்பிடுவார்கள். ஒரு சப்பாத்தி பூனைக்காக தினந்தோறும் எடுத்துச்செல்லப்படும். அதைச் சிறுசிறு துண்டாக்கி அந்தப் பூனைக்கு அவரே போட்டு மகிழ்வார். பின் 15 நிமிடம் மச்சு வராண்டாவிலேயே உலாவுவார். அதுசமயம் மிக்க சந்தோஷமாகப் பேசுவது வழக்கம். நமக்கு உண்டான காரியங்கள் ய ாவையும் அந்த நேரத்தில் கேட்டால் வெற்றியோடு முடித்துக் கொள்ளலாம். பசுமாடு தண்ணீர் குடித்ததா? மூங்கில் கன்றுக்குத் தண்ணீர் ஊற்றினார்களா? என்றெல்லாம் உலாவும்போதே கேட்டுத் தெரிந்து கொள்வார்.

### சில இயல்புகள்

ஓ.பி.ஆர் தமக்கு நிறைய வசதி இருந்தும் ஓமந்தூரில் மச்சு வீடோ, ஓட்டு வீடோ கட்டிக் கொள்ளவில்லை. கூரை வீட்டிலேயே இருந்தார். இதனால் இவரை மற்ற ரெட்டியார்கள் ‘கூரைவீட்டு ரெட்டியார்’ என்று குறிப்பிட்டு வந்தார்கள்.

வீட்டை விட்டு வடலூருக்கு ஓ.பி.ஆர். வந்தார். சொந்தபந்தங்கள், வீடு, வாசல் என்ற உறவுகளையெல்லாம் அறுத்துக் கொண்டார்.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
சுற்றாரை யான்வேண்டேன் கற்பனயும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரை–சுழற்கே
சுற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே : திருப்புலம்பல் 3

என்ற மாணிக்கவாசகர் பாடலுக்கு எடுத்துக் காட்டாக இருந்தார்.

வடலூரில் ஓ.பி.ஆர். தமக்கென்று தனியாகச் சமையல் ஆளையோ வேறு பணியாளையோ வைத்துக் கொள்ளவில்லை. தம் வேலைகளைத் தாமே செய்து கொண்டார் தம் கைப்படவே கடிதங்களை எழுதுவதைப்பழக்கமாகக் கொண்டிருந்தார். ஆள் வைத்து எழுதியதில்லை. நாள்தோறும் தோட்டம், வயல்கள் இவற்றையும் கவனித்தார். இக்காரணங்களால் இளமையில் யோகாசம், சிரசாசனம், உடற்பயிற்சி ஆகியவையெல்லாம் செய்தும் கூட 1969 முதல் இவருடைய உடல்நிலை குன்றிற்று.

### கண் பார்வை குறைதல்

மூலநோய், தலைவலி ஆகியவற்றோடு கண்பார்வையும் குறைந்தது. ஓமந்தூரார் விருப்பப்படி 11.06.1969ல் நடைபெற்ற சுத்த சன்மார்க்க நிலையப் பேரவைக் கூட்டத்தில் திரு.நா.மகாலிங்கம் அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 20.08.1969–ல் நிலையச் சொத்துக்களையும் அன்றாட நிர்வாகப் பொறுப்பையும் செயலாளர் என்ற முறையில் திரு.ஊரன் அடிகள் ஏற்றார்.

இறுதியாக ஓமந்தூரார் தம் சொந்த நிலங்களையும், வடலூரில் தாம் குடியிருந்த கட்டடத்தையும், தக்க ஆதாரங்கள்மூலம் சுத்த சன்மார்க்க நிலையத்திற்கு ஒப்படைத்தார்.

அவருடைய இறுதிக் காலத்தில் சுத்தசன்மார்க்க நிலையத்தில் ஆட்சிக்குழு பின்வருமாறு இருந்தது.

**நிறுவியவர் :**
திரு.ஓ.பி.இராமசாமி ரெட்டியார், தலைவர்
**பொருளாளர் :**
திரு.நா.மகாலிங்கம், பி.எஸ்.சி.எம்.ஐ.இ.
துணைத் தலைவர் :
திரு.எஸ்.சென்னியப்ப முதலியார்
**செயலாளர் :**
திரு.ஊரன் அடிகள்
**துணைச் செயலாளர் :**
திரு.ஔவை நடராசன் எம்.ஏ.எம்.லிட்.
**நிர்வாக உறுப்பினர்கள் :**
திரு.கி.ஆ.பெ.விசுவநாதம்
திரு.ஓ.எம்.லஷ்மிநாராயண ரெட்டியார்
திரு.ஜி.வாகீசம் பிள்ளை
திரு.க.முத்துலிங்க ரெட்டியார்
திரு.அ.சாம்பசிவ ரெட்டியார்
திரு.டாக்டர்.கு.ஸ்ரீனிவாசன், எம்.எஸ்.சி.பி.எச்.டி
திரு.வி.சீதாராம படையாச்சி
திரு.துறவி கந்தசாமி
திரு.வி.அரங்கசாமி நாயுடு

### சமாதி யோசனை

1969 செப்டம்பர் மாதத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை, திருவலம் சிவானந்த மௌன குரு யோகீஸ்வர சுவாமிகள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்.

“திருவலத்துக்குக் கொண்டுபோய் அன்னம் கொடுத்து ஆடை கொடுத்து சமாதி ஆகும் காலத்தில் நீ செய்த தவம் வீண்போகாமல் திருவலத்தில் கோயில் கட்டி வைக்கிறேன் என்று சொன்னோம்.

அதற்கு ஓமந்தூர் ரெட்டியார், நான் ரொம்ப பாடுபட்ட வடலூரில் நந்தவனத்திலேயே சமாதி வைத்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னார்.

1970ல் ஓமந்தூரார் மறைந்தார். அதற்கு ஏறத்தாழ ஓராண்டு முன்னதாக புரட்டாசி 18ல் வடலூரில் ஒரு இடத்தில் சுவாமிகள் கடைக்கால் போட்டுக் கொண்டிருந்தபோது ரெட்டியார் அங்கு வந்து, அது என்ன? என்று கேட்டார்.

உங்களுக்கு சமாதி கோயில் என்று சுவாமிகள் சொன்னார்கள். நான் சாவதற்கு முன்னேயே எனக்கு கோயில் கட்டுகிறீர்களா? என்று சொல்லி சிரித்தார்.

**இன்னும் வளரும்.......**

**தொகுத்தவர் வீ.செல்வராஜூ**

ஆதாரம் : ஆர்.பி.சங்கரன் எழுதிய நூலிலிருந்து

# மணி மகுடம் சூட்டிய திருமதி.C.ரமாபிரபா விருப்ப ஓய்வு பெற்றார்



இந்த உலகில் பலவிதமான பரிமாணங்களை ஒரு பெண் அடைகிறாள். ஒரு மகளாக, சகோதரியாக, மனைவியாக, தாயாக, இல்லத்தரசியாக, தோழியாக காலத்திற்கு காலம் ஒரு பெண் ஏற்கும் வேடங்கள் பல. உடல் உறுதி கொண்டு இருக்கும் ஆண்களை விட மன உறுதி அதிகம் உள்ள பெண்கள் எப்போதும் சிறப்பானவர்கள்தான். அத்தகைய சிறப்புப் படைத்த நம் சமூகத்தைச் சேர்ந்த திருமதி.C.ரமாபிரபா அவர்கள் தமிழக ராஜ்பவனில் ஆளுநரின் செயலகத்தில் 35 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி கடந்த 29.02.2024 அன்று விருப்ப ஓய்வுப் பெற்றார். இவர் குறித்து ரெட்டி மலர் வாசகர்களுக்கு சிறப்பு கட்டுரை.

சென்னை ஆலந்தூர் பகுதியில் அமைந்துள்ள AJS நிதி மேல்நிலைப்பள்ளியின் உதவித் தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வுப்பெற்ற திரு.R.சந்திரசேகரன்–திருமதி.பாக்கியலட்சுமி தம்பதியரின் மூத்த மகளும், ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி திரு.S.சேஷாத்ரி அவர்களின் மனைவியுமான **திருமதி.C.ரமாபிரபா** அவர்கள் ஜூன் 1, 1968 அன்று பிறந்தார். அவருக்கு இரண்டு உடன் பிறந்த சகோதரிகள். இருவரும் தற்பொழுது அமெரிக்காவில் உள்ளனர். ஒருவர் டாக்டராகவும், மற்றொருவர் பொறியாளராகவும் பணியாற்றுகின்றனர்.

திருமதி.C.ரமாபிரபா அவர்கள் ஆரம்பக் கல்வியை சென்னை ஆலந்தூரில் உள்ள இந்திராகாந்தி பிரைமரி பள்ளியிலும், பின்னர் உயர்நிலை, மேல்நிலைக் கல்வியை ஆலந்தூர் AJS நிதி மேல்நிலைப் பள்ளியிலும் பயின்றவர்.




பின்னர் தனது கல்லூரி கல்வியை சென்னை குரோம்பேட்டை வைஷ்ணவா கல்லூரியில் இளங்கலை ஆங்கில இலக்கியமும், தொடர்ந்து சென்னை பல்கலைக் கழகத்தில் முதுகலை ஆங்கில இலக்கியம் மற்றும் உளவியல் என இரண்டு முதுகலைப் பட்டங்களை கற்று தேர்ச்சி பெற்றார்.

சென்னை சௌகார்பேட்டையைச் சேர்ந்த திரு.S.சேஷாத்ரி என்பவரை ஜூன் 27, 1990ல் திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதியினருக்கு சக்தி, பிரதிபா என இரண்டு மகள்கள் உள்ளனர். இருவருக்கும் மணமுடித்து மூத்த மகள் வழி ஒரு பேரன் உள்ளார்.

இவர் படிக்கும்போதே மத்திய அரசு நடத்தும் SSC (Staff Selection Commission) தேர்வை எதிர்கொண்டு வெற்றிப்பெற்ற இவருக்கு இரண்டு துறைகளில் இருந்து டெல்லியில் பணி ஆணை பெற்றார். ஆனாலும் டெல்லி செல்லாமல் இவர் ஸ்டெனோகிராபராக (Stenographer) முன்னாள் தமிழக ஆளுநர் P.C.அலெக்ஸாண்டர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று தாற்காலிகமாக கவர்னர் அலுவலகத்தில் பணியில் அமர்ந்தார். இவரிடம் இருந்த திறமையைப் பாராட்டி தாற்காலிக பணியிலிருந்து நிரந்தர ஸ்டெனோகிராபராக பணியில் அமர்த்தப்பட்டார்.

1994-96 காலக்கட்டத்தில் அப்போதைய ஆளுநர் மேதகு டாக்டர் எம்.சென்னா ரெட்டி அவர்களின் தனி உதவியாளராகவும் (PA) பணியாற்றியவர். டாக்டர்.சென்னா ரெட்டியின் பேரன்பை பெற்ற இவர் அவரது தனிப்பட்ட கடிதங்களை இவரே தயாரித்து அனுப்பும் அளவுக்கு நம்பிக்கைக்குரியவரானார். ஆளுநரின் செயலாளராக பணிபுரிந்த பல்வேறு ஐஏஎஸ் அதிகாரிகள் இவரின் நேரம் தவறாமை, அயராத கடின உழைப்பு மற்றும் நேர்த்தியான பணியினை பாராட்டி உள்ளனர்.

திருமதி.C.ரமாபிரபா அவர்கள் தமிழக ஆளுநரின் செயலகத்தில் பணியாற்றியக் காலத்தில், தமிழக ஆளுநரின் அலுவலகத்தில் நேர்முக உதவியாளர் உள்ளிட்ட பல்வேறு பதவி



களில் சிறப்பாக பணியாற்றியவர். துணைச் செயலாளரின் தனி உதவியாளராகவும், உதவிப் பிரிவு அலுவலர் (ASO), பிரிவு அதிகாரி (SO) என பல பதவி உயர்வுகள் பெற்று பணியாற்றினார். 2006 முதல் 2018 வரை பல்கலைக்கழகங்களுக்கான பிரிவு அதிகாரியாக (Section Officer) பணியாற்றினார். பின்னர் சார்பு செயலாளராக பதவி உயர்வு பெற்றார்.

தற்போதைய தமிழக ஆளுநர் மேதகு. ஆர்.என்.ரவி அவர்களிடம் திருமதி.C.ரமாபிரபா அவர்கள் சார்புச் செயலாளராகவும், 2022 முதல் 2024 வரை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கவர்னர் செயலகத்தின் பொது தகவல் அதிகாரியாகவும் சிறப்பாக பணிபுரிந்தார். துணைச் செயலாளர் பதவி உயர்வு பெற இருந்தநிலையில் பல்வேறு குடும்ப பணிச்சுமை மற்றும் குடும்ப பொறுப்புகள் அதிகரித்ததன் காரணமாக பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து கடந்த பிப்ரவரி 29, 2024 அன்று விருப்ப ஓய்வினை பெற்றார். மேதகு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் இவருக்கு பிரியா விடை விழா நடத்தி கௌரவித்தார்.

சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் ஊட்டச்சத்து, கல்வி மற்றும் சுகாதார நடவடிக்கைகளின் மூலம் சமூகத்தில் சுகாதார சமபங்கை உருவாக்கவும், இடைவெளியைக் குறைக்கவும் சிநேகா (SNEHA) என்கிற அமைப்பு செயல்பட்டு வருகிறது. இதில் தன்னை உறுப்பினராக இணைத்துக் கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளாக மன அழுத்தம் கொண்ட பலருக்கும் ஆலோசனைகள் வழங்கி சேவை எண்ணத்தோடு பணியாற்றி வருகிறார்.

இது தவிர, நம் ரெட்டியார் சமுதாயத்தின் மீது மிகுந்த அன்பும், பாசமும் கொண்டிருந்த இவர் சென்னை ரெட்டி இளைஞர் பேரவையில் உறுப்பினராகி பேரவை நடத்திய பல்வேறு கூட்டங்களில் கலந்துக்கொண்டு தமது அன்பை வெளிப்படுத்தியும், ஆதரவை தெரிவித்தும் வருகிறார். திருமதி.C.ரமாபிரபா அவர்கள் ஓய்வு பெற்றதையொட்டி ரெட்டி இளைஞர் பேரவையின் சார்பில் கௌரவிக்கப்பட்டார்.

இவர் ஆங்கிலத்திலும், தமிழிலும் மிகச் சிறந்த புலமைப் பெற்றவர். அதனால் ஆங்கில மொழிப் பெயர்ப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். எனவே தற்போது தனது ஓய்வு நேரத்தில் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கும் பணியினை மணிமேகலை பதிப்பகத்திற்காக செய்து வருகிறார். நமது சங்கத்திற்கு எப்போதும் உறுதுணையாக இருந்து ஆதரிப்பவர்.

ஓய்வு பெற்றப்பின் தன் குடும்பத்தாருடன் இன்புற்று இருப்பதையே நோக்கமாக கொண்டு விருப்ப ஓய்வு பெற்ற திருமதி.C.ரமாபிரபா அவர்கள் தனது இரண்டாவது இன்னிங்ஸ் காலத்தில் மகிழ்ச்சியாக பேரப்பிள்ளைகளுடன் கழிக்கவும், நீண்ட ஆயுளுடன், நோய் நொடி இல்லாமல் வாழவும் இறைவனை பிரார்த்திக்கிறோம்.

திருமதி.C.ரமாபிரபா அவர்களுக்கு ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பாக வாழ்த்துகள்.

**எந்த ஒரு செயலையும் ஆர்வம் குறையாமல் நம்பிக்கையுடன் செய்தால் வெற்றி நம்மை தேடி வரும்.**

# டாக்டர்.வி.ஜனார்த்தனம் அவர்களுக்கு 'சிறந்த மருத்துவர்' விருது




கடந்த 01.07.2024 அன்று தேசிய மருத்துவர் தினத்தை ஒட்டி சிறந்த மருத்துவ சேவையாற்றிய மருத்துவர்களுக்கு தமிழக அரசு விருது வழங்கி கௌரவித்துள்ளது. மருத்துவத் துறையில் தனியார் பங்களிப்பில் சிறப்பாக சேவையாற்றி வரும் கோவை கே.டி.வி.ஆர். மருத்துவமனையின் இயக்குனர் **டாக்டர்.வி.ஜனார்த்தனம்** MBBS, MS, FAIS, FICS அவர்களுக்கு தமிழக அரசால் **'சிறந்த மருத்துவர்'** என்ற விருதினை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் **மாண்புமிகு.மா.சுப்பிரமணியன்** அவர்கள் சென்னையில் வழங்கி கௌரவித்தார். அவருக்கு நமது ரெட்டிமலர் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை, கிண்டியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக் கழகத்தில் 01.07.2024 அன்று நடைபெற்ற இதற்கான விழாவில் டாக்டர்.வி.ஜனார்த்தனம் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் திரு.ககன்தீப் சிங் பேடி IAS, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக் கழகத்துணை வேந்தர் டாக்டர்.கே.நாராயணசாமி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை இயக்குனர் டாக்டர்.செல்வவிநாயகம், மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குனர் டாக்டர்.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குனர் டாக்டர்.ராமமூர்த்தி உள்ளிட்டோர் விழாவில் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

**கே.டி.வி.ஆர் மருத்துவமனை ஒரு கண்ணோட்டம் :**

நீண்டகாலமாக கோயம்புத்தூர் சாய்பாபா காலனியில் உள்ள கே.டி.வி.ஆர் மருத்துவமனை மூலம் ஏழைகள் பயன்பெறும் வகையில் உயர் தரமான மருத்துவ சிகிச்சையினை வழங்கி வருகிறார் மறைந்த தெய்வத்திரு.வெங்கட்ராம ரெட்டி அவர்களின் மகனும், இயக்குனருமான டாக்டர். வி.ஜனார்த்தனம் அவர்கள். இவர் கோவை சுற்றுச்சூழல் அமைப்பின் நிறுவனராகவும், தெலுங்கு கூட்டமைப்பின் தலைவராகவும் செயல்படுகிறார். இவரது தந்தை கோவையில் அடுக்குமாடி கட்டட கட்டுமானத்தில் முன்னோடியாக திகழ்ந்தவர்.

கோவையில் தாம் குடியிருக்கும் சாய்பாபா காலனி மக்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கு எளிதான அணுகுமுறையோடு கூடிய மருத்துவத்தை வழங்கவேண்டும் என எண்ணி டாக்டர்.வி.ஜனார்த்தனம் அவர்கள் கே.டி.வி.ஆர் மருத்துவமனைளை தொடங்கினார். இது 50 படுக்கைகளை கொண்டது. பொது வார்டுகள், டீலக்ஸ் அறைகள் மற்றும் சூப்பர் டீலக்ஸ் அறைகளை கொண்டு அனைத்து தரப்பு மக்களுக்கும் தரமான, உலகத்தரம் வாய்ந்த சிகிச்சையினை வழங்கி வருகிறது.

இம்மருத்துவமனையில் சிறப்பாக இயங்கும் 24 மணிநேர அவசர சேவைகள், புறநோயாளிகள் பிரிவு, அறுவை சிகிச்சை, மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவம், குழந்தை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இதயவியல், நரம்பியல்




அறுவை சிகிச்சை, பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, காஸ்ட்ரோ–என்ட்ராலஜி, மாஸ்டர் ஹெல்த் செக்கப், பிஸியோதெரபி போன்றவை அடங்கும்.

இந்த மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இரண்டு பெரிய அறுவை சிகிச்சை அரங்குகள், இரண்டு சிறிய அறுவை சிகிச்சை அரங்குகள், முழு அளவிலான ஆய்வகம், எக்ஸ்–ரே மற்றும் மருந்தக சேவைகள் உள்ளன. பொதுமக்கள் மற்றும் புறநோயாளிகளின் வசதிக்காக மின்தூக்கி மற்றும் உணவக வசதிகள் உள்ளன. மேலும் EPABX வசதிகள், ஜெனரேட்டர் போன்ற வசதிகளையும் கொண்டிருக்கிறது.

இங்கு உயர்தர நோயறிதல் மற்றும் சிகிச்சை பராமரிப்புகள் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றன. இந்த மருத்துவமனையானது நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன், இன்டியன் டெலிபோன் இன்டஸ்டிரிஸ், இந்தியன் ஆயில் கழகம், இந்தியன் ஏர்லைன்ஸ், கனரா வங்கி மற்றும் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா ஆகிய நிறுவனங்களின் ஊழியர்களின் சிகிச்சைக்கான அங்கீகாரம் பெற்றுள்ளது.

K.T.V.R Hospital பொது அறுவை சிகிச்சையில் மக்களுக்கு பொதுவான சில நோய்களுக்கான மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகளுடன் மேலாண்மை நெறிமுறைகளை வழங்கும் மிகவும் சிறப்பு வாய்ந்த துறையாக மாறியுள்ளது. குடல் அழற்சிக்கான எளிய இரைப்பை குடல் அறுவை சிகிச்சை முதல் லேப்ராஸ்கோபிக் காஸ்ட்ரிக் பைபாஸ், தைமெக்டோமி மற்றும் பல மேம்பட்ட அறுவை சிகிச்சைகள் வரை இங்கு வழங்கப்பட்டு வருகிறது. பித்தப்பை கற்கள், குடலிறக்கங்கள் மற்றும் மலக்குடல் நோய்களுக்கான சிகிச்சையும் இங்கு வழங்கப்படுகிறது.

**சிறந்த மருத்துவர் விருது**பெற்ற டாக்டர் வி.ஜனார்த்தனம் அவர்கள் ரெட்டி மலருக்கு அளித்த சிறப்பு பேட்டியில்,

“ஒவ்வொரு தனிநபரும் அணுகக்கூடிய வகையில் சர்வதேச தரத்துடன் சுகாதாரத்தை கொண்டு வருவதே எங்கள் K.T.V.R மருத்துவ குழுமத்தின் நோக்கம். மனிதகுலத்தின் நலனுக்காக சுகாதார சேவைகளை வழங்குவதில் சிறப்பான சாதனை மற்றும் பராமரிப்பிற்காக எங்களை அர்ப்பணித்துக்கொண்டு செயல்பட்டு வருகிறோம். K.T.V.R குழும மருத்துவமனையின் அடுத்த கட்ட வளர்ச்சி என்பது “கோடிக்கணக்கான மக்களின் உயிர்களை காப்பது” ஆகும்.

கோயம்புத்தூரில் உள்ள சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றாக K.T.V.R குழும மருத்துவமனை கருதப்படுவதற்கு காரணம் என்ன என்ற கேள்விக்கு அவர்,

“நாங்கள் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பாரம்பரியத்துடன் சிறப்பான முறையில் தனி கவனத்தோடு சுகாதார சேவைகளை வழங்கி வருவதோடு, எங்களின் அர்ப்பணிப்புள்ள நிபுணத்துவம் கொண்ட டாக்டர்களின் குழு மூலம் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு ஒருங்கிணைந்த மற்றும் முழுமையானத் திட்டமிடப்பட்ட மருத்துவச் சேவையை வழங்கி எப்போதும் பாடுபடுவதில் கவனம் செலுத்தி வருகிறோம்” என்றார்.

அவருக்கு ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பில் தொலைபேசி மூலம் உரையாடி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. அவரது மருத்துவ சேவை மென்மேலும் வளரவும், சாதனைப் படைக்கவும் வாழ்த்துவோம்.


ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

**ரெட்டி திருமணத் தகவல் மையம்**

எண் : 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083. 044 - 2485 3333, 9688877700,
E-mail Id : reddymatrimonired@gmail.com, For Online Registration Website : www.reddymatrimony.co.in

நிறைவான சேவைக்கு சரியான சாய்ஸ் இம்மையம்.
வேலை நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
[வார விடுமுறை கிடையாது]

# ரெட்டியார் சமுதாயம் குறித்து ஆய்வு செய்த வீ.செல்வராஜூ அவர்களுக்கு டாக்டர் பட்டம்



ஓ.பி.ஆர்.நினைவுத் தொண்டு அறக்கட்டளை நிர்வாக அறங்காவலரும், ரெட்டி இளைஞர் பேரவையின் நிறுவனத்தலைவரும், கே.ஆர்.டி கேரியர் அகாடமியின் இயக்குநருமான திரு.வீ.செல்வராஜூ அவர்கள் 2012 முதல் 2024 வரை 12 ஆண்டுகள் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் **தமிழ்நாட்டில் ரெட்டியார்களின் சமூக–கலாச்சாரம் மற்றும் அரசியல் வரலாறு–ஓர் ஆய்வு, SOCIO - CULTURAL AND POLITICAL HISTORY OF REDDIARS IN TAMIL NADU – A Study** எனும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டார். அரசுத் துறையில் பணியாற்றியபோதே இவர் தன் ஓய்வு நேரத்தில் பகுதி நேர பணியாக நிர்வாகப் பணிகளுக்கிடையே ஆய்வு செய்து வந்தார். ஆய்வறிக்கையை ஓய்வுபெற்றப்பின் தற்போது திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பித்தார்.

அவரது ஆய்வு முடிவுகள் பன்னாட்டு–உள்நாட்டுப்புறத்தேர்வாளர்களாலும், பல்கலைக்கழக ஆட்சிக்குழுவினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு 2024 ஜூன் 3 திங்கட்கிழமை அன்று புறத்தேர்வாளர் மற்றும் ஆய்வாளர்கள் முன்னிலையில் வாய்மொழித் தேர்வு நடைபெற்றது. அத்தேர்வினையும் வெற்றியோடு எதிர்கொண்டு முடித்தார். அதனை முன்னிட்டு திரு.வீ.செல்வராஜூ அவர்களுக்கு புறத்தேர்வர்களும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவினரும் **வரலாற்றுத்துறையில் முனைவர் பட்டம்** வழங்கி உள்ளது. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற இருக்கும் பட்டமளிப்பு விழாவில் இவருக்கு முறையான முனைவர் பட்டம் வழங்கப்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ரெட்டியார்கள் குறித்த வரலாற்று ஆய்வு இதுவரை யாரும் செய்யாத நிலையில் இந்த ஆய்வின் மூலம் சாதனை படைத்த திரு.வீ.செல்வராஜூ அவர்களை ஓ.பி.ஆர்.நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர்கள், ரெட்டி இளைஞர் பேரவை நிர்வாகிகள், கே.ஆர்.டி. கேரியர் அகாடமி, சமூக ஆர்வலர்கள், ரெட்டி மலர் ஆசிரியர் குழு உறுப்பினர்கள் சார்பாக பாராட்டி மகிழ்கிறோம்.

தகவல் : ஆசிரியர் திரு.R.இராஜசேகரன்.

# டெம்பிள் சிட்டி K.சுப்புராமன்



திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தாலுகா ஆண்டாங்குளம் என்ற விவசாய கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வந்தனர். ஆண்டாங்குளம் பண்ணையாராக விளங்கியவர் திரு.ஆர்.கந்தசாமி ரெட்டியார். இவரது மனைவி சரஸ்வதி அம்மாள். இவர்களது திருமணம் 1961ம் ஆண்டு ஆண்டாங்குளத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். இதில் இரண்டாவது மகனாக ஆண்டாங்குளத்தில் பிறந்தவர் டெம்பிள் சிட்டி திரு.K.சுப்புராமன்.

இவரது தந்தை ஆர்.கந்தசாமி கிராமத்தில் விவசாயம், கால்நடைகள் மற்றும் இலங்கையில் ஹோட்டல், பின்னர் மதுரையில் மீனாட்சி கோவில் அருகிலேயே வளர்மதி ஹோட்டல், பூங்கா ஹோட்டல், செல்வம் ஹோட்டல், ஹோட்டல் கல்பனா மற்றும் சொந்தமாக ஓட்டல் மீனாம்பிகை போர்டிங் & லாட்ஜ் என உணவகங்கள் மற்றும் லாட்ஜ் வைத்து பெரும் செல்வந்தராக இருந்தார். மதுரையில் 1965 முதலே அம்பாசிடர் கார் சொந்தமாக வைத்திருந்தார். அவருடைய புதல்வரான திரு.K.சுப்புராமன் மற்றும் உறவினர்கள் சிலர் பங்குதாரர்களுடன் இணைந்து கௌரி பழமுதிர்ச் சோலை நடத்தி வந்தனர். கௌரி ஹோட்டல் திரு.முத்துகிருஷ்ணன் அவர்கள் இவருக்கு வியாபார வளர்ச்சிக்கு உதவினார்.


தொடர்ந்து அவரது மைத்துனர் திரு.எல்.விஷ்ணுராம் மூலமாக தமுக்கம் அருகே அசோக் பவன் என்ற ஹோட்டல் ஒன்றினை எடுத்து நடத்தினர். பின்னர் மாட்டுத்தாவணி எதிர்புறம் திரு.K.சுப்புராமன் அவர்களும் அவரது சகோதரர் டெம்பிள் சிட்டி திரு.குமார் அவர்களும் இணைந்து ஹோட்டல் டெம்பிள் சிட்டி உணவகம் ஆரம்பித்தார்கள். அதன் பிறகு தனித் தனியாக பல கிளைகள் உருவானது. இன்றளவும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

திரு.K.சுப்புராமன் துணைவியார் திருமதி.ஜெயலட்சுமி மூலமாக **டெம்பிள் சிட்டி மசாலா** என்ற நிறுவனம் தொடங்கப்பட்டது. அதன் மூலம் மசாலா பொடிகளை அரைத்து இவர்கள் நடத்தும் உணவகங்களில் பயன்படுத்தியால் உணவுகள் அனைத்துமே சுவையானதாகவும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி உண்ணும் வகையிலும் இருந்து வருகிறது. இதுவரை இவரது ஹோட்டலில் உணவருந்தியவர்கள் உணவுகளின் தரத்தையும் சுவையையும் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

இவரது உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் உபசரிப்பும், ஆரோக்கியமான தயாரிப்பும், சுகாதாரமான சூழலும் வாடிக்கையாளர்களை மீண்டும் மீண்டும் வர தூண்டுகிறது. மேலும் இவர் தனது கடைக்கு வரும் வாடிக்கையாளர்களிடம் முகக்கவசம், கையுறைகள் அணிந்து வரும்படி அன்புடன் வேண்டுவது வழக்கம்.

இவர்களது நிறுவனம் மேலும் மேலும் வளர்ச்சியடைய ஓ.பி.ஆர். நினைவுத்தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை, ரெட்டி மலர் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

# திரு.ப.ஜெய்பிரகாஷ் சாரல் பொது அறிவு தகவல் தொகுப்பு













சில நூல்கள் படித்து முடித்தப்பின் நமது செயல்பாடுகளை மேம்படுத்தும். ஆனால் வெகு சில நூல்கள் வாசித்துக் கொண்டிருக்கும்போதே பார்வையையும், எண்ணத்தையும் மாற்றிவிடும். அந்த வகையில் கண்டுபிடிப்புகளின் வரலாறு, உலக சிறப்புகளின் வரலாறு, சாதித்த பெண்களின் வரலாறு மற்றும் வரலாறு படைத்தோரின் வரலாறு என்ற இந்த நான்கு நூல்களின் தொகுப்பு அமைந்துள்ளது என்றால் அதுமிகையாகாது. நாம் நினைவில் கொள்ள வேண்டிய புள்ளிவிவரங்கள், மறக்க முடியாத சாதனைப் பெண்களின் வரலாறு, வரலாற்று நாயகர்கள் யார்? யார்? நவீன கண்டுபிடிப்புகள் எவை என்பதை எல்லாம் இந்த நான்கு நூல்கள் தெளிவுப்படுத்துகிறது. இந்நூல் களை தொகுத்த திரு.ப.ஜெய்பிரகாஷ் அவர்களுக்கு பாராட்டுகள்.

**திரு.ப.ஜெய்பிரகாஷ் யார்?**

தினம் தினம் பிழைப்புக்கான வழிதேடி, அதில் எப்பாடுபட்டாவது பொருளீட்டி தானும் உண்டு, தன் குடும்பத்திற்கும் உணவளித்து தான் பெற்ற பிள்ளைகளுக்கு தேவையான சீர்வரிசைகளை செய்து முடிப்பதே தன் வாழ்நாள் சாதனையாக கருதும் எண்ணற்ற மக்களின் மத்தியில் பயனுள்ள தொகுப்புகளை பிறர் நலன்கருதி நூலாக வெளியிட்டிருப்பவர் திரு.ப.ஜெய்பிரகாஷ். இவர் திருச்சியில் ஆகஸ்டு 25, 1955-ம் ஆண்டு காரை கிராமம் திரு.பசுபதி ரெட்டியார்–திருமதி.ஜானகி அம்மாள் தம்பதியரின் மகனாக பிறந்தவர் திரு.ப.ஜெய்பிரகாஷ். தனது பள்ளிப்படிப்பை திருச்சி சாரநாதன் பள்ளியில் முடித்த பின்னர் பிஷப்ஹீபர் கல்லூரியில் 1976–ம் ஆண்டு பி.ஏ. (பொருளாதாரம்) பட்டப்படிப்பையும் படித்து முடித்தார்.

கல்லூரிப் படிப்பை முடித்தபின் மத்திய அரசுப் பணியான புள்ளியியல் துறையில் 1980ம் ஆண்டு பணியில் சேர்ந்தார். 30 ஆண்டுகளுக்கு மேல் பணி–யாற்றிவிட்டு, 2011ம் ஆண்டு விருப்ப ஓய்வுப்பெற்றார்.

**புத்தகங்கள் வாசிப்பு :** பணியில் இருந்து ஓய்வு பெற்றதும், பொது அறிவு புத்தகங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் சாதித்த சாதனையாளர்கள் பற்றிய தமிழ், ஆங்கிலம் என நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களை வாங்கி படித்து, அதில் இடம் பெற்ற முக்கியமான அரிய தகவல்களையெல்லாம் குறிப்பெடுத்து எழுதி வைத்துள்ளார்.



இதுபோல 40 ஆண்டுக்கும் மேலாக தினசரி பத்திரிகைகள், வார இதழ், மாத இதழ் என பல்வேறு புத்தகங்களையும் படித்து அதில் இடம் பெற்ற அரிய தகவல்களையெல்லாம் தொகுத்து வைத்திருக்கிறார். தனியொருவராக அவர் எடுத்த முயற்சியின் பயன்தான் இந்த தொகுப்பு உருவானது.

**திருப்பத்தை ஏற்படுத்திய சந்திப்பு :** இதனிடையில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் தேசிய ஒளி எனும் மாத இதழை நடத்தி வந்த ஆசிரியர் சிறுகமணி திரு.கந்தசாமி அவர்கள் அவரது இல்லத்திற்கு வருகை தந்தார். அப்போது அவர் தனது தேசிய ஒளி மாத இதழுக்கு கட்டுரைகள் துணுக்குகள் போன்றவைகளை எழுதி தரும்படி கோரினார்.

அதன்பின் தேசிய ஒளி இதழுக்கு, தன்னிடம் இருந்த அரிய தொகுப்புகளையெல்லாம் ஒவ்வொரு மாதமும் எழுதி அனுப்பினார். அவை அனைத்தும் அவ்விதழில் இடம்பெற்றன. அவை அனைத்தும் வாசகர்களுக்கிடையே வரவேற்பை பெற்றதாக ஆசிரியர் அவரிடம் கூறினார்.

அதன்பின்னர் தேசிய ஒளி மாத இதழின் ஆலோசகராகவும், அதன் பின் இணை ஆசிரியர் பொறுப்பையும் ஏற்று பத்திரிக்கையில் இணைந்து பணியாற்றினார்.

தேசிய ஒளி இதழ் ஆசிரியர் திரு.கந்தசாமி அவர்கள் இவரிடம் பலமுறை கூறியதாவது, இவரது கட்டுரைகள், அரிய தகவல் செய்திகளையெல்லாம் தொகுத்து புத்தகமாக வெளியீடு செய்து தருகிறேன் என்று கூறினார். இதனிடையே எதிர்பாராத விதமாக 2016ம் ஆண்டு மே மாதம் இயற்கை எய்திவிட்டார்.

அவரது மறைவுக்குப் பின் அவற்றையெல்லாம் தொகுத்து புத்தகமாக வெளியிட தீர்மானித்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டார். 2019-ம் ஆண்டின் இறுதிக்குள் **கண்டுபிடிப்புகளின் வரலாறு, உலக சிறப்புகளின் வரலாறு** ஆகிய இரண்டு புத்தகங்களை எழுதி முடித்தார். அவற்றை வெளியீடு

செய்ய எண்ணிய நேரத்தில், உலகெங்கும் நிலவிய கொரோனா பாதிப்பால் நூல்கள் வெளியீடு தள்ளிப் போனது.

இரண்டு ஆண்டுகள் நிலவிய கொரோனா கால கட்டத்தில், வீட்டிலேயே முடங்கி கிடந்த சமயத்தில், **சாதித்த பெண்களின் வரலாறு** மற்றும் **வரலாறு படைத்தோரின் வரலாறு** என மேலும் இரண்டு புத்தகங்களை எழுதி முடித்தார். உதிரிப்பூக்களை மாலையாகத் தொடுப்பது போன்ற இப்பணியினை சிறப்பாக செய்து முடித்தார்.

இந்த நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கபெற்ற அறிய தகவல்களை தமிழ் மொழியில் மொழி பெயர்த்துள்ளார். இவர் தொடாத தலைப்புகள் இல்லையெனலாம். பொருளாதாரம், விஞ்ஞானம், அரசியல், ஆன்மீகம், அதிசயத் தகவல்கள், சினிமா, இயற்கை போன்ற பல தலைப்புகளில் எழுதி தன் திறமையை வெளிக் கொண்டு வந்துள்ளார். இவைகளுக்கு ஏற்ற படங்களையும் தேர்ந்தெடுத்துள்ளார். அருமை. இது மக்களை மிகவும் ஈர்க்கிறது. இது தற்போது பல நபர்களால் பேசப்பட்டும், வாசிக்கப்பட்டும் வருகிறது. பல்கலைக்கழக மாணவர்களும் தங்களுடைய ஆய்வுக்காக இத்தொகுப்புகளை பயன்படுத்தி வருகின்றனர். இது போன்று பல நூல்கள் விரியட்டும் என்று வாழ்த்துவோம்.

## நூல்களைப் பற்றிய முகவுரை

### 1. கண்டுபிடிப்புகளின் வரலாறு

புதிய கண்டுபிடிப்புகளின் ஒன்றான போட்டோ காப்பியர் (XEROX) பற்றிய தகவல்

**செஸ்டர் கார்ல்ஸன் :** இவர் அமெரிக்காவில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். பள்ளிப் படிப்பை முடித்தபின் 1936ம் ஆண்டு சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். சட்டப் புத்தகங்கள் வாங்க கையில் பணம் இல்லை. ஆகையால் இவர் நூலகத்தில் சட்டப் புத்தகங்களை கடன்வாங்கி, கைவலிக்க மிக சிரமப்பட்டு எழுதி படித்தார்.

இதற்கு மாற்று வழிகளை கண்டுபிடிக்க ஆராய்ச் சிகள் செய்து Photo Copier எனும் நகல் பிரதி எடுக்கும் இயந்திரத்தை 1938ம் ஆண்டு கண்டு பிடித்து சாதித்தார். இதுபோன்ற அனைத்து முக்கிய கண்டுபிடிப்புகள் குறித்த தகவல்கள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன.

### 2. உலக சிறப்புகளின் வரலாறு

கடல் மட்டம் : உலகின் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள உயரமான மலைகள், உயரமான இடங்கள் அனைத்தும், கடல் மட்டத்திலிருந்து இத்தனை அடி உயரம் என கணக்கிடுவதற்கு அளவுகோளாக உள்ள இடம் இங்கிலாந்து நாட்டின் லிவர்பூர் பகுதியே ஆகும். குறிப்பாக இமயமலை எவரெஸ்ட் சிகரத்தின் உயரமான 8848 மீ என கணக்கிடப் பட்டது. இதன் அடிப்படையிலேயே.

சூரிய உதயம் : பூமியில் சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைகிறது. இவ்வாறு உலகில் முதலில் சூரிய உதயமாகும் நாடு ஆஸ்திரேலியா கண்டத்தில் உள்ள கிரிபடித்தீவு நாடாகும். இது போன்ற அரிய தகவல்கள் அனைத்தும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

### 3. சாதித்த பெண்களின் வரலாறு

உலகின் முதல் மருத்துவப் பெண்மணி : எலிசபெத் பிளாக்வெல். இவர் அமெரிக்காவில் 1830ம் ஆண்டு பள்ளிப் படிப்பை தொடங்கி, 1849ம் ஆண்டு மருத்துவப் பட்டம் பெற்றார்.

உந்துசக்தி : இவரது தோழிதான் மருத்துவப் படிப்புக்கான உந்து சக்தியாக விளங்கினார். இவரது தோழி நோய் காரணமாக ஆண் மருத்துவரிடம் சிகிச்சை பெற்றார். ஒரு பெண் மருத்துவர் சிகிச்சை அளித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று பிளாக்வெல்லிடம் கூறி வேதனை அடைந்தார். உடனே, நீ ஏன் மருத்துவம் படிக்கக் கூடாது? என்று கூறி மருத்துவம் படிக்கும் ஆவலைத்தூண்டினார். அதுவே பிளாக்வெல்லுக்கு மருத்துவம் பயில உந்து சக்தியை ஏற்படுத்தியது. நியூயார்க் ஹோபர்ட் மருத்துவக் கல்லூரியில் படித்து 1849ம் ஆண்டு மருத்துவப்பட்டம் பெற்றார்.

### 4. வரலாறு படைத்தோரின் வரலாறு

லீ–குன்–ஹீ : உலகின் முன்னணி நிறுவனமாக சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் 'ஐ' உருவாக்கியவர் லீ குன் ஹீ ஆவார். போட்டிகள் நிறைந்த தொழில் துறையில் வெற்றிப் பாதைக்கு இவர் இட்டுச் சென்றார்.

இவரது வெற்றிக்குக் காரணம், போட்டிகளை எதிர்கொண்டு, புதிய மாற்றங்களை பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை சந்தைப்படுத்தியது தான்.

'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பதே இவரது தாரக மந்திரம் ஆகும். இது போன்ற ஒவ்வொரு துறையிலும் வெற்றிகரமாக தடம்பதித்து, வரலாற்றில் வாழ்பவர்களை இந்நூல் விவரிக்கின்றது.

இன்றைய நவீன அறிவியல் விளக்கங்கள் பலவற்றை மரபுரீதியாகவும், அறிவியல் பார்வை யுடனும் சுட்டிக்காட்டிய அறிஞர்கள், வரலாற்று ஆசிரியர்களின் தொகுப்பே இந்த நூல்கள்.

இந்த தொகுப்பு நூல்கள் அனைத்தும் போட்டித் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வின் போது பெரிதும் பயனுள்ளதாக இருக்கும். எனவே இந்நூல் ஒவ்வொருவரின் இல்லத்திலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷம்.

இந்த நூல்களெல்லாம் வெறும் நூல்கள் அல்ல. வாசிப்பவர்கள் தங்களைத் தாங்களே செதுக்கிக் கொள்ள வடிவெடுக்கும் உளிகள். அப்படி ஓர் உளியாகவும், இதயத்தில் ஏற்றவேண்டிய ஒளியா–கவும் இதோ உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.



| | |
|---|---|
| ஆங்கிலம் | 084 |
| இயற்பியல் | 095 |
| வேதியியல் | 095 |
| உயிரியல் | 090 |
| கணிதம் | 090 |

திருச்சி, கோத்தூர் ஸ்ரீவிக்னேஷ் வித்யாலயா CBSE பள்ளியில் +2 படித்த **R.இனியா** அவர்கள் 500க்கு 454 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர் திருச்சியைச்சேர்ந்த திரு.R.ராதாகிருஷ்ணன்–திருமதி.R. ஷகிலா அவர்களின் மகளாவார்.

# திருவண்ணாமலை பண்ட ரெட்டியார் சத்திர நிர்வாகக் குழு




கடந்த 30.06.2024அன்று திருவண்ணாமலை பண்டரெட்டியார் சத்திர நிர்வாக குழு தேர்தல் நடைபெற்றது. இதில் திரு.S.வெங்கடாஜலபதி அவர்கள் தலைவராகவும், திரு.S.குணசீலன் செயலாளராகவும், திரு.K.சேகர் அவர்கள் பொருளாளராகவும், திரு.உதயசேகர் அவர்கள் மற்றும் 2 துணைத் தலைவர்கள், 2 துணைப் பொருளாளர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் 47 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்று கொண்டனர்.

**திருவண்ணாமலை பண்டரெட்டியார் சத்திர நிர்வாக சங்கம் குறித்த ஒரு சரித்திர குறிப்பு**

1875ல் பண்டரெட்டியார் மடம் ஏற்படுத்தப் பட்டது. 1911ல் பதிவு செய்யப்படாத அமைப்பான மடத்தை நிர்வகிக்க ஓர் ஒப்பந்தம் உருவானது. பின்னர் 1914ல் மடத்தின் சிப்பந்திகளாக மடத்துகாரன், தோட்டக்காரன் நியமனம் செய்யப்பட்டனர். 1920ல் மடத்தில் இனத்தினர் தங்கிப்படிக்க தொடங்கினர்.




மாணவர் விடுதி தோன்றியது. 1942ல் மடம் பழுதுபார்த்து புதுப்பிக்கப்பட்டது. 1950ல் இனக் குடும்பங்கள் மடத்தில் வந்து இலவசமாக தங்க ஆரம்பித்தது. பின்னர் 1960ல் மடத்தில் தங்குபவர்களிடம் வாடகை வசூல் செய்து அதிலிருந்து மடத்தை பராமரித்தனர்.

1969ல் பண்டரெட்டியார் சத்திர நிர்வாகம் நிறுவப்பட்டது. இதன்மூலம் 1973ல் **மீனாட்சி திருமண மண்டபம்** கால்கோள் விழா நடத்தப்பட்டது. தொடர்ந்து 1976ல் மீனாட்சி திருமண மண்டபத் திறப்புவிழா நடைபெற்றது. 1995ல் இச்சங்கம் வெள்ளிவிழா கண்டது. 1969 முதல் 78 வரை ஏந்தல் திரு.M.விஸ்வநாதன் ரெட்டியார் தலைமைப்பொறுப்பேற்றார். அதனைத்தொடர்ந்து விருதாச்சலம் திரு.K.நாராயணசாமி ரெட்டியார், திரு.S.பாண்டுரங்க ரெட்டியார் உள்ளிட்ட தலைவர்கள் சிறப்பாக வழிநடத்தினார்கள்.

1952 முதல் பண்டரெட்டியார் மாணவர் உபகாரத்திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் 1978 முதல் பண்ட ரெட்டியார் சத்திர நிர்வாக சங்கத்தால் செயல் படுத்தப்பட்டு மாணவர்களுக்கு உபகார சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க திருவண்ணாமலை பண்டரெட்டியார் சத்திர நிர்வாக சங்கத்திற்கு புதிய நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் ரெட்டி மலர் வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறது.

# நெல்லியில் இருக்கு நிறைந்த பலன்கள்

மனித உடலுக்கு நீடித்த இளமையை வாரி வழங்கும் வல்லமை கொண்டது நெல்லிக்கனி. இது "கனிகளின் அரசன்" என்றே அழைக்கப்படுகிறது.



நெல்லிக்கனியின் மகத்துவத்தைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கிய காலத்திலிருந்தே தமிழர்கள் பறைசாற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய நிலை? மற்ற பழங்கள், காய்கறிகள் சாப்பிடுவதில் காட்டும் ஆர்வத்தில், சிறு அளவு கூட நெல்லி சாப்பிடுவதில் காட்டுவதில்லை. துவர்ப்பு மற்றும் புளிப்பாக இருப்பதால், நெல்லியை பெரும்பாலான மக்கள் முற்றிலுமாக ஒதுக்குகிறார்கள். இதுமிகவும் துரதிஷ்ட வசமானது. மக்கள் தெரிந்தோ, தெரியாமலோ தங்கள் உடலுக்கு தாங்களே வஞ்சனை செய்து கொள்கிறார்கள். கால்சியம், பாஸ்பரஸ், புரதம், பீட்டா கரோட்டின், நார்ச்சத்து, இரும்புச் சத்து, தாது உப்புகள், மாவுச் சத்து, ரிபோஃபிளேவின், தயாமின் என மனிதர்களின் ஆரோக்கிய வாழ்வுக்குத்தேவையான அனைத்து அம்சங்களும் நெல்லியில் அடங்கியிருக்கின்றன.

வைட்டமின் சி மற்றும் டேனின் ஆகியவை இதில் நிறைந்து காணப்படுகின்றன. நெல்லிச் சாறை தனியாகவோ, பாகற்காய் சாறு அல்லது தேனோடு கலந்தோ அருந்தினால் புற்றுநோய் கட்டுப்படும் என்கிறார்கள் மருத்துவர்கள். புற்று நோயாளிகளுக்கு இதனைப் பரிந்துரை செய்தும் வருகிறார்கள். நெல்லி, ஆயுர்வேத மருத்துவத்திலும் மிகச்சிறந்த பங்கு வகிக்கிறது. நெல்லி சாப்பிட்டால், நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். செரிமானமும் கூடும். குளிர்ச்சி அதிகமாக இருப்பதால், ரத்தச் சுத்திகரிப்புக்குப் பெருந்துணை புரிகிறது நெல்லி. வைட்டமின் சி குறைவால் ஏற்படும் 'ஸ்கர்வி' எனும் பல், ஈறு நோயைக் கட்டுப்படுத்தும் தன்மையும் நெல்லிக்கு உண்டு.

இத்தனை அற்புதங்கள் அடங்கி இருந்தால் கூட இதன் சுவை ஈர்ப்புடையதாக இல்லாமல் இருப்பதால், இதை சாதாரணமாக சாப்பிட பெரும்பாலான மக்கள் விருப்பம் காட்டுவதில்லை. இதனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றினால், கண்டிப்பாக விற்பனை வாய்ப்பு வெற்றிகரமாக அமையும்.

## நெல்லிக் கனி ஜாம்

நெல்லியில் உள்ள துவர்ப்புத் தன்மையைப் போக்குவதற்கு 8 சதவிகித உப்புக் கரைசலில் 2 நாட்கள் வைக்கவேண்டும். பிறகு 10 நிமிடம் சுடு தண்ணீரில் போட்டு வைத்து எடுக்கவேண்டும். ஆவியில் 5 நிமிடம் வேக வைக்க வேண்டும். கொட்டையை நீக்கிய பிறகு, சதைப் பகுதியை நன்கு மசிய வைத்து கூழாக்கவேண்டும். நெல்லிக் கூழுடன் சர்க்கரை, எலுமிச்சைச் சாறு கலந்து காய்ச்ச வேண்டும். சர்க்கரைப் பாகின் அடர்த்தி 68.5 டிகிரி பிரிக்ஸ் அளவை அடையும் போது சூடுபடுத்துவதை நிறுத்தவேண்டும். அல்லது கரண்டியில் எடுத்துப்பார்த்து, தாள் போன்ற பதம் வந்ததும் சூடுபடுத்துவதை நிறுத்தி விடவேண்டும். இந்தப்பதத்தில் நெல்லி ஜாம் தயாராகிவிடும். இதை காற்று நீக்கம் செய்யப்பட்ட பாட்டிலில் நிரப்பி விற்பனை செய்யலாம்.

## நெல்லிக் கனி பவுடர்

நெல்லியை சிறு சிறு துண்டுகளாக வெட்டி, வெயிலில் உலர்த்தி, மிக்ஸியில் அரைத்தே நெல்லிபவுடர் தயார் செய்துவிடலாம். இதனைக் குளிர்ந்த நீரில் கலந்து தேவையான அளவு சர்க்கரை சேர்த்து ஜூஸாகவும் அருந்தலாம். சாதாரண தண்ணீர் அல்லது பாலில் கலந்தும் அருந்தலாம். இது உடல்சோர்வை நீக்குவதோடு உடலின் வறட்சி தன்மையையும் போக்கும். தினமும் 3 கிராம் நெல்லி பவுடருடன் 8 கிராம் முதல் 9 கிராம் நெய் சேர்த்து சாப்பிட்டால் தோல் நோய்கள் நாளடைவில் குணமாகும்.

## நெல்லிக் கனி ஸ்குவாஷ்

நெல்லிக் கனியை நன்றாகக் கழுவி, 10 நிமிடம் ஆவியில் வேக வைக்கவேண்டும். வேக வைத்த நெல்லியை குளிர்ந்த நீரில் இட்டு கொட்டைகளை நீக்க வேண்டும் சதைபாகத்தை மின் அரவை இயந்திரத்திலிட்டு, அரைத்து வடிப்பான் மூலம் சாறை வடிகட்டி தனியே வைக்க வேண்டும். தண்ணீர், சர்க்கரை, எலுமிச்சை சாறு ஆகியவற்றை கலந்து சர்க்கரை கரையும் வரை சூடுபடுத்தி, வடிகட்டி நெல்லிக்கனி சாறுடன் நன்கு கலந்து காற்று நீக்கம் செய்யப்பட்ட பாட்டில்களில் நிரப்பினால் நெல்லிக்கனி ஸ்குவாஷ் தயார். இது உடல் சூட்டை தணித்து, கண் உபாதைகளை நீக்கும், நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்.

## நெல்லியின் வேறு பெயர்கள்

தமிழ் மற்றும் மலையாளத்தில் நெல்லி என அழைக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் கூஸ்பெர்ரி, தெலுங்கில் ஆர்லாகாமு, பஞ்சாபியில் அமோல்பால், வங்காளம் மற்றும் ஒரியா மொழியில் ஆம்லா, ஹிந்தியில் ஆம்லா, சமஸ்கிருதத்தில் தாத்ரி, தாத்ரிபாலா அம்லாக்கி என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

நெல்லியில் பனாரசி, பிரான்சிஸ், சக்கையா என மூன்று முக்கிய ரகங்கள் உள்ளன. உத்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள நரேந்திரா தேவ் வேளாண் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் நெல்லியில் என்.ஏ.-5 (நரேந்திரா ஆன்லா-5) என்.ஏ -6, என்.ஏ-7, என்.ஏ-10 கிருஷ்ணன், காஞ்சன் என பல புதிய ரகங்களை உருவாக்கியுள்ளது.

குஜராத்தில் பி.எஸ்.ஆர் என்ற நெல்லி ரகம் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. நெல்லி உற்பத்தியில் உலகளவில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாடு கர்நாடகம், ஆந்திரம், ராஜஸ்தானம், இமாச்சலப்பிரதேசம், மேற்கு வங்காளம், ஒடிசா, குஜராத் என இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் நெல்லி விளைகிறது. மூலிகை சார்ந்த அழகு சாதனைப் பொருட்கள் தயாரிப்பிலும் நெல்லி பயன்படுத்தப் படுகிறது.

# சமுதாய சங்கங்களின் கண்டனக் குர



# ரல்களும், அமைச்சரின் விளக்கமும்
















## 'ரெட்டியார் சமூகம் குறித்து குறைவாக பேசவில்லை'

சென்னை, ஜூன் 28–

"ரெட்டியார் சமூகம் குறித்து, நான் குறைவாக எதுவும் பேசவில்லை," என அமைச்சர் ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

சட்டசபையில், கடந்த 25ம் தேதி மாலை, மானிய கோரிக்கை விவாதத்திற்கு அமைச்சர் ராஜகண்ணப்பன் பதில் அளித்த போது, அமைச்சர் நேரு, சபாநாயகர் அப்பாவு குறித்து கூறிய சில கருத்துகள், சபைக் குறிப்பில் இருந்து நீக்கப் பட்டன.

ஆனால், அவரது பேச்சு நேரடியாக ஒளிபரப்பானதால், ரெட்டியார் சமுதாயம் குறித்து தவறாக பேசியதாக தகவல் பரவியது.

இது தொடர்பாக, நேற்று அமைச்சர் ராஜகண்ணப்பன், சட்டசபையில் அளித்த விளக்கம்:

சட்டசபையில் அன்று பேசும் போது, ரெட்டியார் சமூகம் குறித்து பேசியதாக, தவறாக எடுத்துக் கொண்டுள்ளனர். எந்த சமூகம் குறித்தும் குறிப்பாக பேசவில்லை. அவர்கள் தங்களை பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

முதல்வருடன் கலந்து பேசி அறிவிப்பு வெளியிடப்படும். எந்த சமுதாயம் குறித்தும், குறிப்பாக ரெட்டியார் சமூகம் குறித்து, நான் குறைவாக எதுவும் பேசவில்லை.

சமுதாய பிரச்னையில் நாம் போகக்கூடாது என்பதில், அரசு உறுதியாக உள்ளது.

நாம் அனைவரும் ஒன்று என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நான் சமுதாயம் குறித்து பேசியதாக, யாரும் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

சபாநாயகர் அப்பாவு: ஏற்கனவே அமைச்சர் கூறி

## ரெட்டியார் சமூகத்தை
## ...த்தப்பட்டோர் பட்டியலில் ...ர்க்க வேண்டும்
### ...மச்சருக்கு கோரிக்கை

...ர், ஜூன்.27 ...னர்.

...சட்டசபையில் ...ப்பட்டோர் ... மேலும், ரெட்டியார் சமூகத்தில், அதிகளவு விவசா...

...கின்றனர். பலர் இளைஞர்களுக்கு உரிய வேலைவாய்ப்பு கிடைக்காமலும், வசதி வாய்ப்பு ஏற்றத் தாழ்வுகளாலும் சொந்த சமூகத்தை பெண் கொடுக்காமல் புறக்கணிப்பு செய்வதால், ஒரு சமூகத்திற்குள் நவீன தீண்டாமைக்கு ஆட்பட்டுள்ளனர்.

பிற்படுத்தப்பபட்ட நலத்துறை கண்ணப்பன், பொருளாதார ரீதியாக பின்தங்கி சிரமம்படும் ரெட்டியார் சமூகத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்க நடவ...




## 'ரெட்டியார் சமூகம் குறித்து குறைவாக பேசவில்லை'
### ராஜகண்ணப்பன் விளக்கம்

சென்னை, ஜூன் 28–

சட்டசபையில், கடந்த 25ம் தேதி மாலை, மானிய கோரிக்கை விவாதத்திற்கு அமைச்சர் ராஜகண்ணப்பன் பதில் அளித்த போது, அமைச்சர் நேரு, சபாநாயகர் அப்பாவு குறித்து கூறிய சில கருத்துகள், சபைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டன.

ஆனால், அவரது பேச்சு நேரடியாக ஒளிபரப்பானதால், ரெட்டியார் சமூதாயம் குறித்து தவறாக பேசியதாக தகவல் பரவியது.

இது தொடர்பாக, நேற்று அமைச்சர் ராஜகண்ணப்பன், சட்டசபையில் அளித்த விளக்கம்:

சட்டசபையில் அன்று பேசும் போது, ரெட்டியார் சமூகம் குறித்து பேசியதாக, தவறாக எடுத்துக் கொண்டுள்ளனர். எந்த சமூகம் குறித்தும் குறிப்பாக பேசவில்லை. அவர்கள் தங்களை பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

முதல்வருடன் கலந்து பேசி அறிவிப்பு வெளியிடப்படும். எந்த சமுதாயம் குறித்தும், குறிப்பாக ரெட்டியார் சமூகம் குறித்து, நான் குறைவாக எதுவும் பேசவில்லை. சமுதாய பிரச்னையில் நாம் போகக்கூடாது என்பதில், அரசு உறுதியாக உள்ளது.

நாம் அனைவரும் ஒன்று என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நான் சமுதாயம் குறித்து பேசியதாக, யாரும் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

ராஜகண்ணப்பன்

சபாநாயகர் அப்பாவு: ஏற்கனவே அமைச்சர் கூறியதை, சபைக்குறிப்பில் இருந்து நீக்கி விட்டேன். அமைச்சர்கள் பதிலுரை நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. அமைச்சர் பேசிய வார்த்தைகள், சமூக வலைதளங்களில் பரவின. அந்த வார்த்தை மனம் புண்படும்படி இருக்கும். யாருடைய மனதையும் புண்படுத்த நினைக்கவில்லை என்று கூறுங்கள்.

அமைச்சர் ராஜகண்ணப்பன்: ஜாதி, பேதமற்ற சமுதாயம் என்பதே நம் கொள்கை. யாருடைய மனதையும் புண்படுத்துவது கிடையாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# சதுரங்க போட்டியில் சாதனைப் படைத்து வரும் கீர்த்திஸ்ரீ ரெட்டி







சதுரங்கம் மிகவும் புகழ்பெற்ற விளையாட்டுகளில் ஒன்றாகும். சதுரங்கம் என்றால் நான்கு அங்கம் என்று பொருள்படும். அரசர்களுக்கு நான்கு அங்கமாக யானைப் படை, குதிரை படை, தேர் படை, காலாட்படை அணி செய்கின்றன. இது சதுரங்க சேனை எனப்படும். இதனைப் பின்பற்றியே இவ்விளையாட்டும் சதுரங்கம் எனப்பெயர் பெற்றது. சதுரமான ஒரு பலகையில் அறுபத்து நான்கு கட்டங்கள் இருக்கும். இருவர் விளையாடும் விளையாட்டு என்பதால் இருவருக்கும் உரிய கட்டங்கள் நிறம் வேறுபட்டு இருக்கும். கருப்பு வெள்ளை என்ற இருவண்ணங்களில் இக்கட்டங்கள் அமைந்திருக்கும்.


இரண்டு விளையாட்டாளர்களுக்கும் தனித் தனியே ஆளுக்கு 16 காய்கள் வீதம் மொத்தம் 32 காய்கள் இருக்கும். இக்காய்களை புத்திசாலித்தனமாக நகர்த்தி விளையாடுவதே இவ் விளையாட்டின் முக்கிய அம்சமாகும். இக்காய்களில் அரசன், அரசி, அமைச்சர்கள், குதிரைகள், கோட்டைகள், காலல்கள் என பெயர் சூட்டப்பட்டிருக்கும். எதிர்எதிரே இக்காய்கள் நகர்த்தப்பட வேண்டும். விளையாட்டாளர்கள் விதிமுறைப் படியே காய்களை நகர்த்த இயலும். எதிர் விளையாட்டாளர்களின் அரசனைக் கைப்பற்றுவதே ஆட்டத்தின் நோக்கமாகும்.

ஆறாம் நூற்றாண்டிலேயே இவ்விளையாட்டு தோன்றியதாக கூறப்படுகின்றது. இன்று உலகம் முழுவதும் சதுரங்க விளையாட்டு புகழ்பெற்று திகழ்கின்றது எனலாம். அப்படிப்பட்ட விளையாட்டில் பல தடைகளை தாண்டி சாதனைப் படைத்து வரும் நம் இன மாணவி செல்வி R.கீர்த்திஸ்ரீ ரெட்டி பற்றிய ஒரு சிறப்பு கட்டுரை.

இன்றைய பெண் குழந்தைகள் ஆண் பிள்ளைகளுக்கு நிகராக அனைத்து துறைகளிலும் சாதனை புரிந்து வருகின்றனர். டென்னிஸ், குத்து சண்டை, சதுரங்க போட்டிகள், மல்யுத்தம், ஜிம்னாஸ்டிக், கிரிக்கெட், ஹாக்கி போன்ற பல விளையாட்டுகளில் பெண்கள் சாதனை புரிகின்றனர். அந்த பட்டியலில் இடம்பெறப் போகும் கீர்த்திஸ்ரீ ரெட்டியின் வாழ்க்கை வரலாறு.

சென்னை, போரூர் மதநந்தபுரம் திரு J.ராஜாராம் – திருமதி.விஜயலட்சுமி தம்பதியரின் மகளாக செல்வி R.கீர்த்திஸ்ரீ ரெட்டி ஆகஸ்ட் 11, 2007 அன்று பிறந்தவர். இவரது தந்தை கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பத்தை சேர்ந்தவர். இவர் தற்போது கட்டடப் பொறியாளராக சென்னையில் உள்ளார்.

கீர்த்திஸ்ரீ ரெட்டி தனது ஆரம்பக்கல்வியை சென்னை, வளசரவாக்கத்தில் உள்ள பொன் வித்யாஷரம் பள்ளியில் 3ம் வகுப்பு வரை படித்தவர். அப்போது தமிழக அளவில் நடந்த சதுரங்கபோட்டியில் இரண்டாம் பரிசை பெற்றார். ஸ்மார்ட்போன் பிடியிலிருந்து குழந்தைகள் விடுபட்டு பிடித்தமான விளையாட்டுகளில் ஈடுபட பெற்றோர்கள் தொடர்ந்து அறிவுறுத்தி வழிகாட்ட வேண்டும் என்ற கொள்கைக் கொண்ட இவரது தந்தை கீர்த்திஸ்ரீ ரெட்டிக்கு ஏற்ற பள்ளியை தேர்வு செய்தார். சென்னை, வேலம்மாள் மெட்ரிக் பள்ளியில் 4ம் வகுப்பினை கல்வி உதவித்தொகையுடன் படிக்க கிடைத்த வாய்ப்பினை பயன் படுத்திக்கொண்டு அப்பள்ளியில் சேர்த்தார். அது முதல் படிப்பில் கவனம் செலுத்திவரும் இவர் தற் போது சென்னை, முகப்பேர் வேலம்மாள் மெட்ரிக் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வருகிறார்.


பள்ளிக் கல்வித்துறை

பாராட்டுச் சான்றிதழ்

கீர்த்திஸ்ரீரெட்டி.ரா
பதினொன்றாம் வகுப்பு
வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
சென்னை மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்
67-வது இந்தியப் பள்ளிகளின் விளையாட்டுக் கூட்டமைப்பு
2023-2024-ஆம் கல்வியாண்டில் நடத்திய தேசிய அளவிலான
.........சதுரங்கம்.........விளையாட்டுப் போட்டியில்
தங்கம் / வெள்ளி / வெண்கலம் பதக்கம் பெற்றமைக்காக
இப்பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

நாள் : 14.06.2024
சென்னை

பள்ளிக்கல்வி இயக்குநர்


FIDE
GENS UNA SUMUS
INTERNATIONAL CHESS FEDERATION
FIDE is pleased to confirm herewith that
Keerti Shree Reddy
FIDE ID: 45094640
India
has obtained the title of
Woman FIDE Master
in the year 2024
Arkady Dvorkovich
FIDE President





SCHOOL GAMES FEDERATION OF INDIA
67TH NATIONAL SCHOOL GAMES 2023-24
CHESS GIRLS U19
VELLORE,TAMILNADU
26-12-2023 to 30-12-2023
Certificate of Merit
Awarded that Miss/Mr. KEERTI SHREE REDDY
Father's name Mr. RAJARAMAN J
Date of birth 11-08-2007 Class XI participated in the
67TH NATIONAL SCHOOL CHESS Championship / Tournament 2023-24
from State/UT/Unit TAMILNADU has been
declared position FIRST in Event/Discipline CHESS
and Achieved (TEAM)
Date- 30-Dec-23
Place- VELLORE
Deepak Kumar (IAS) President
Observer / Authority SGFI
Amarjeet K. Sharma Secretary General

விளையாட்டு போட்டிகளில் ஆர்வம் உள்ள மாணவர்களை தேர்வு செய்த பள்ளி நிர்வாகம் ஹங்கேரியில் 27.12.2021 முதல் 30.12.2021 வரை ஷியோஃபோகில் நடைபெற்ற 15வது மாஜிஸ்டேர்ன் ஓபன் பதக்கத்திற்கான போட்டியில் கலந்து கொள்ள அனுப்பிவைத்தது. இதில் முதல் பரிசினை வென்றார். இதற்காக ஹங்கேரி நாட்டின் 10,000 ஃபோரிட்டன் பரிசுத்தொகையினையும், பதக்கத்தையும் கீர்த்திஸ்ரீ ரெட்டி பெற்றார்.

மாலத்தீவில் 23.06.2022 அன்று நடைபெற்ற மேற்கத்திய ஆசிய இளைஞர்களுக்கான யூத் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் 18 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் இவர் கலந்து கொண்டார். இதில் ஸ்டாண்டர்டு வடிவத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், வெண்கலப்பதக்கத்தையும் வென்றார்.




மேலும் அவர் **Woman FIDE Master (WFM)** பெண்களுக்கான உயரிய விருதினை பெற்றார். இதில் பல்வேறு நாடுகளைச் சார்ந்த சதுரங்க வீராங்கனைகள் கலந்து கொண்டனர். போட்டியில் கலந்துக்கொண்டு கீர்த்திஸ்ரீ ரெட்டி **WFM** விருதினை பெற்றார்.

2023ல் ஜாம்ஷெட்பூரில் நடைபெற்ற டாடா ஸ்டீல் ஏசியன் யூத் கேர்ள்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் (Tata Steel Asian Youth Girls Chess Championship) போட்டியில் இவர் கலந்து கொண்டார். இதில் 16 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் சிறந்த வீராங்கனைக்கான தங்கப்பதக்கத்தை கீர்த்திஸ்ரீ ரெட்டி அவர்கள் பெற்றார். மேலும் அவர் 168 Yellow Rating புள்ளிகளைப் பெற்றார்.

26.4.2024 முதல் 30.4.2024 வரை கோவில்பட்டி நேஷனல் இன்ஜினியரிங் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில மகளிர் செஸ் சாம்பியன்ஷிப் 2024க்கான போட்டி நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராக கலந்துக்கொண்ட திரு.K.R.அருணாச்சலம் அவர்கள் கீர்த்திஸ்ரீ ரெட்டிக்கு ரொக்கப்பரிசினை வழங்கி கௌரவித்தார்.

பதினோராம் வகுப்பு படிக்கும்போது, கடந்த 2024 ஜூன் மாதம் 14 அன்று நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 67வது இந்தியப்பள்ளிகளின் விளையாட்டு கூட்டமைப்பு (SCHOOL GAMES FEDERATION OF INDIA) 2023-2024-ஆம் கல்வியாண்டில் நடத்திய தேசிய அளவிலான சதுரங்கம் விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ் பெற்றார்.

கீர்த்திஸ்ரீ ரெட்டி 37வது தமிழ்நாடு மாநில அளவில் 19 வயதிற்குட்பட்ட ஜூனியர் பெண்கள் செஸ் சாம்பியன்ஷிப் 2023-2024 போட்டி 26.06.2024 முதல் 30.06.2024 வரை ஓசூர் மாதகொண்டப்பள்ளி மாதிரிப்பள்ளியில் நடைபெற்றது. இதில் ரொக்கப் பரிசு ரூ.7000 மற்றும் கோப்பையைப் பெற்றார். இதற்கு அனைத்துத்தரப்பில் இருந்தும் பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளது.

மேலும் வரும் ஜூலை 7 முதல் இலங்கையில் நடைபெறும் மேற்கத்திய ஆசிய சதுரங்கப் போட்டியில் R.கீர்த்திஸ்ரீ ரெட்டி கலந்து கொள்ள இருக்கிறார். இதனைத் தொடர்ந்து வரும் 20.09.2024 முதல் 28.09.2024 வரை ஹரியானாவின் குருக்ஷேத்ராவில் நடைபெறவிருக்கும் தேசிய பெண்கள் செஸ் சாம்பியன்ஷிப்-2024, 19 வயதிற்குட்பட்டோர் பெண்கள் பிரிவில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டு கலந்துக் கொள்ள இருக்கிறார்.

உலக அளவில் சதுரங்கப்போட்டியில் தொடர் வெற்றிப்பெறுவர்களை பட்டியலிடும் சர்வதேச சதுரங்க அமைப்பு **"Federation Internationale Des Echecs" (FIDE)** நடத்திய சதுரங்கப்போட்டியில் இவர் **Woman International Master (WIM)** மாஸ்டர் விருது பெறுவதை நோக்கமாகக்கொண்டு விளையாடி வருகிறார்.

சர்வதேச சதுரங்கப் போட்டிகளில் கலந்து கொள்ள தொடர்ந்து பயிற்சி எடுத்துக் கொள்ளவும், பயணம் செய்யவும் தனி மனிதராக இவரது தந்தை போராடி வருகிறார். எதிர்காலத்தில் பிரபல தனியார் நிறுவனங்களும், அரசும் உதவி செய்தால் மேலும் பல வெற்றிகளை கீர்த்திஸ்ரீ ரெட்டி குவிப்பாள் என இவரது தந்தை வேண்டுகோள் வைத்தார்.

மாணவி கீர்த்திஸ்ரீ ரெட்டி பள்ளிக்கு மட்டுமல்லாமல் குடும்பத்திற்கும், ரெட்டி சமூகத்திற்கும், தாய் நாட்டிற்கும் பெருமை சேர்த்து வருகிறார். அவர் எதிர்கொள்ளும் எல்லா போட்டிகளிலும் சாதனை படைக்க ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பாக நெஞ்சார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

# கல்லூரியில் என்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம்?

**மாணவர் பகுதி**




நம் மாணவர்கள் மத்தியில் முதல் ரேங்க், கோல்ட் மெடலிஸ்ட் இவர்களையெல்லாம் விட, 60% முதல் 80% வரை மதிப்பெண்கள் வாங்கியவர்கள் பிற்காலத்தில், வாழ்வில் வெற்றி பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது நாம் கண்கூடாக காணும் உண்மை. காரணம், இவர்கள் பாடத்தைத் தாண்டி, கலை, விளையாட்டு என பலவற்றில் ஈடுபாடு உடையவர்களாக, முழுமையான தனித்துவம் பெற்றவர்களாக இருப்பதுதான்.

+2 முடித்தவுடன் இவர்கள் என்ன மாதிரியான படிப்பைத் தேர்ந்தெடுக்கலாம் என்று பார்க்கும் போது, சிறந்த படிப்புகளான மருத்துவம், பொறியியல் மட்டுமின்றி ஏராளமான வித்தியாசமான படிப்புகள் உள்ளன என்றாலும், இந்த இரண்டு வகைகளையும் நாம் போகிற போக்கில் விட்டுவிட முடியாது. எனவே முதலில் இவை இரண்டையும் பார்த்து விட்டு, பிறகு மற்றவற்றைப் பட்டியலிடுவோம்.

## பொறியியல் படிப்புகள்

பொறியியல் படிப்பைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகள் மற்றும் அவற்றில் உள்ள இடங்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், விண்ணப்பித்த அனைவருக்குமே சீட் கொடுத்தும், மீதம் காலியாக இருக்கிறது என்பது தான் உண்மை. எனினும் சிறந்த கல்லூரிகளில் சேர்ந்திடல் வேண்டும்.

எனவே, பொறியியல் சீட் வாங்குவதைவிட, அப்படிப்பை வெற்றிகரமாக முடிப்பதுதான் இன்றைக்கு கடினமாக இருக்கிறது. எனவே பொறியியல் படிப்பை சிறப்பாக வெற்றிகரமாக முடிக்கக்கூடிய சக்தி இருக்கிறதா என்பதை தெளிவாக ஆராய்ந்து பிறகு முடிவெடுப்பது சிறப்பாக இருக்கும்.

## மருத்துவ படிப்புகள்

மருத்துவ படிப்பை பொறுத்தவரை, எண்ணிக்கையில் குறைந்தளவு கல்லூரிகளே இருப்பதால், மிக அதிகளவு மதிப்பெண் வாங்கியவர்களுக்கான படிப்பாக மட்டுமே அது இருந்து வருகிறது. எனினும், மருத்துவம் (MBBS) என்கிற ஒரேயொரு படிப்பிற்கு மட்டும், நாம் முயற்சி செய்வதைத் தாண்டி, மருத்துவத் துறையில் உள்ள மற்ற படிப்புகளிலும் கவனம் செலுத்தினால், இடம் கிடைக்கும் வாய்ப்பு சற்றே அதிகரிக்கும். மருத்துவம் போலவே, அதே கால அளவில் உள்ள மாற்று மருத்துவம் சார்ந்த சித்தா, ஆயுர்வேதா, ஓமியோபதி, யுனானி ஆகியவற்றின் மருத்துவப் பட்டப்படிப்புகளும் புகழ்பெற்று வருகின்றன.

தவிர, BDS எனப்படும் பல் மருத்துவப்படிப்பு, மருத்துவம் (MBBS) சொல்லித்தரப்படுகிற கல்லூரிகளை விட, சற்று அதிகமான கல்லூரிகளில், தமிழ்நாட்டில் உள்ளதால், இவற்றில் சீட் கிடைக்கும் வாய்ப்பு சற்றே அதிகம். கூடவே, மருந்தியல் (B.Pharm), பிசியோதெரபி, B.Sc. Nursing, B.P.T கண் மருத்துவம் சார்ந்த ஆப்டோமெட்ரி போன்றவை மருத்துவம் சார்ந்த நாம் கவனிக்க வேண்டிய படிப்புகளாகும்.

மருத்துவத்தில், மனிதர்களுக்கான மருத்துவம் தாண்டி, கால்நடைகளுக்கான மருத்துவம் காலம் காலமாக புகழ்பெற்ற ஒன்றாகும். வெட்னரி சயின்ஸ் படிப்பு (B.V.Sc.) சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரியிலும், இந்தப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் நாமக்கல் கல்லூரியிலும் நடத்தப்படுகிறது.

தவிர, மீன் வளம் (B.F.Sc.) சார்ந்த பட்டப் படிப்பாக சொல்லித்தருவதற்கென, தூத்துக்குடியில் அரசு மீன்வளக்கல்லூரி ஒன்றும் உள்ளது. இந்தக் கல்லூரியும், கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தின் கீழ்தான் செயல்படுகிறது. இது, வரவேற்பை பெற்று வரும் இன்னொரு புதிய படிப்பாகும்.


## வேளாண்மை படிப்புகள்

வேளாண்துறை (B.Sc.-Agriculture). எப்போதுமே வரவேற்புள்ள ஒரு படிப்பாகும். கோவையிலுள்ள வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ், கோவையில் மட்டுமல்லாது, திருச்சி, பெரியகுளம் என பல்வேறு இடங்களில் உள்ள உறுப்புக் கல்லூரிகளிலும், இந்தப்படிப்பு சொல்லித் தரப்படுகிறது. வேளாண் கல்லூரிகளில் அதிகம் நாடப்படும் இன்னொரு படிப்பு, தோட்டக்கலை (Horticulture) சார்ந்த படிப்பாகும்.

தவிர, கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் ஒருசில சிறப்பு பொறியியல் பட்டப் படிப்புகளும் சொல்லித் தரப்படுகின்றன என்பது பலர் அறியாத செய்தி. இந்த பொறியியல் படிப்புகளுக்கு (B.Tech. Bio-Technology, Food Process Engineering, Agricultural IT) நீங்கள் நேரடியாக கோவை வேளாண் பல்கலைக் கழகத்துக்கு தனியாக ஒரு விண்ணப்பம் போட வேண்டும்.

ஒரு காலத்தில், அரசியலில் நுழைய வேண்டுமானால், அதற்கு சட்டக்கல்லூரியில் சேர்வதானது பாஸ்போர்ட் எடுப்பது போன்றது என்ற கருத்து இருந்து வந்தது. ஆனால், இடையில் கொஞ்சம் தொய்வு ஏற்பட்டு, மீண்டும் சட்டப்படிப்பிற்கான மவுசு கூடிவருகிறது. சென்னை, கோவை, திருச்சி, நெல்லை, மதுரை மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களிலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில், ஐந்தாண்டு சட்டப் படிப்பில் சேர +2வில் நீங்கள் எந்த குரூப் எடுத்திருந்தாலும் போதுமானது.

இப்படியான தொழிற்படிப்புகளுக்கான கல்லூரிகள் ஒருபுறம் இருந்தாலும், கலை, அறிவியல் (B.A. B.Sc. B.Com.) போன்ற படிப்புகளை வழங்கும் கலை அறிவியல் கல்லூரிகளும், நூற்றுக் கணக்கில் புகழ்பெற்று விளங்குகின்றன. எனினும், இந்தக் கலை அறிவியல் கல்லூரிகள் ஒரு காலத்திலிருந்த வழக்கமான படிப்புகளிலிருந்து மாறுபட்டு, இன்று நிறைய புதிய படிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளன. சொல்லப்போனால், பொறியியல் கல்லூரியிலுள்ள கம்ப்யூட்டர் சயின்ஸ், பயோடெக்னாலஜி பட்டப்படிப்புகளாக, கலை அறிவியல் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. தவிர, அறிவியல் [சயின்ஸ்] பாடங்களில் கூட, சிறப்புத்துறைகளாக மைக்ரோபயாலஜி, பயோகெமிஸ்ட்ரி, பிளான்ட் பயாலஜி என சிறப்பு பட்டங்கள் தரப்படுகின்றன. சத்துணவு, இந்திய சுற்றுலா, ஹோம் சயின்ஸ், உளவியல் என பெண்களை மையப்படுத்தி, அதி–கமான சிறப்பு பட்டப் படிப்புகள், குறிப்பாக, மகளிர் கல்லூரிகளில் சொல்லித் தரப்படுகின்றன.




### கலை மற்றும் அறிவியல் படிப்புகள்

கலை, அறிவியல் கல்லூரிகளில் மிகவும் பிரபலமான இன்னொரு படிப்பு B.Com. என்றாலும், அதோடு சேர்ந்து படிக்கவேண்டிய இன்னும் சில படிப்புகளை நம் மாணவர்கள் கவனத்தில் கொள்ளா மல் விட்டுவிடுகின்றனர். அதாவது சார்ட்டர்டு அக்கவுன்டன்ட் (C.A.) காஸ்ட் அக்கவுன்டன்ட் (ICWAI) மற்றும் கம்பெனி செக்ரட்டரி (ACS) ஆகிய மூன்றும் தான் அவை.

ஒருகாலத்தில், பட்டப்படிப்பை முடித்தப் பிறகுதான், இவற்றை முயற்சி செய்யவே முடியும். ஆனால் இன்று, +2 முடித்து பட்டப்படிப்பில் சேர்ந்தவுடனேயே இவற்றுக்கான தொடக்க நிலைத் தேர்வுகளை எழுதமுடியும் என்பதால், பட்டப்படிப்பை படித்துக் கொண்டே ஒரே நேரத்தில் இந்தத் தேர்வுகளையும் எழுதுவதால், மூன்றாண்டு காலம், விரயமாகாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

திரைப்படக்கல்லூரியில் சேர்ந்து படிப்பதை, ஒரு காலத்தில், பல வீடுகளில் அனுமதிக்கவே மாட்டார்கள். ஆனால் இன்று, திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் அத்தனைப் படிப்புகளும், தொலைக்காட்சித்துறைக்கும் வேலை வாய்ப்புகளை பெற்றுத் தருவதால், அந்த எதிர்ப்பு நிலை மாறியுள்ளது. சென்னை அரசு திரைப்படக் கல்லூரியில், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு மற்றும் படத்தொகுப்பு போன்ற பல்வேறு பிரிவுகளில் டிப்ளமோ படிப்பு சொல்லித் தரப் படுகிறது.

அதேபோல், சென்னை அடையாறில் உள்ள அரசு இசைக் கல்லூரியில், இசை மற்றும் நடனம் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் படிப்புகள் சொல்லித் தரப்படுவதோடு, இன்று பல்வேறு மாவட்ட தலை நகரங்களிலும் அரசு இசைக் கல்லூரிகள் உள்ளன.

உங்களின் ஓவியத் திறமையை மட்டுமே வைத்து பட்டப்படிப்பில் நுழையும் வாய்ப்பு உள்ளது தெரியுமா? சென்னை எழும்பூரிலுள்ள நூற்றாண்டு பழமை வாய்ந்த அரசு ஓவிய நுண்கலைக் கல்லூரியிலும், கும்பகோணத்திலுள்ள இதே அரசுக் கல்லூரியிலும் BA எனப்படும் Fine Arts பட்டப்படிப்பு, பல்வேறு சிறப்பு பிரிவுகளில் சொல்லித் தரப் படுகிறது. இதில் சேர, உங்களது ஓவியத் திறமையைப் பரிசோதிக்கும் நுழைவுத்தேர்வு ஒன்று நடத்தப்பட்டு, அதன்மூலம் நீங்கள் சேர்க்கப்படுவீர் கள். இரண்டுமே அரசுக்கல்லூரிகள் என்பதால், கல்விக் கட்டணமும் மிகக்குறைவு தான். இன்று தென்னிந்திய திரையுலகில் புகழ்பெற்று விளங்கும் பல்வேறு ஆர்ட் டைரக்டர்களும் இக்கல்லூரிகளின் மாணவர்களே!

பலரது கவனத்தையும் ஈர்த்துவரும் படிப்புகளில், முக்கியமான இன்னொரு படிப்பு **பேஷன் டெக்னாலஜி.** சென்னை தரமணியில் அமைந்துள்ள மத்திய அரசுக்கல்லூரியான நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் பேஷன் டெக்னாலஜி (NIFT) அகில இந்திய அளவில் புகழ் பெற்ற ஒரு கல்வி நிறுவனமாகும். இங்கு பல்வேறு பிரிவுகளில் ஆடை வடிவமைப்பு, ஆடை உற்பத்தி போன்ற டிசைனிங் கோர்ஸ்கள் பட்டப்படிப்பு களாக சொல்லித் தரப்படுகின்றன.

சமையல் சார்ந்த படிப்பான **கேட்டரிங் டெக்னாலஜி, ஹோட்டல் மேனேஜ்மென்ட்** படிப்பும், எப்போதுமே நேரடி வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் படிப்புகளாகும். ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், கப்பல், விமானம் என உலகின் பல்வேறு நாடுகளுக்கும் பயணம் செய்து வேலைபார்க்கும் வாய்ப்பை கேட்டரிங் படிப்புகள் தருவதால், அதுசார்ந்த ரசனை உள்ளவர்கள் தாராளமாக தேர்ந்தெடுக்கலாம். அதேபோல், பத்திரிகை, தொலைக்காட்சி மற்றும் விளம்பரம் என ஊடகத்துறை வளர்ச்சி இன்று சிறப்பாகவே இருந்து வருவதால், **மீடியா படிப்புகளான** B.Sc.Visual Communication, Mass Communication, Public Relations, Journalism, Electronic Media போன்ற பட்டப் படிப்புகளும், நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய படிப்புகளாகும்.

எனவே காலங்காலமாக தேர்ந்தெடுக்கப்படும் ஒரே மாதிரியான படிப்புகளையே தேர்ந்தெடுக்காமல், உங்கள் ரசனை மற்றும் வேலை வாய்ப்பு ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு வித்தியாசமான ஒரு பட்டப்படிப்பை தேர்ந்தெடுத்து படிப்பதே சிறப்பாக அமையும்.

# இந்தியப் பொறியியல் பணித் தேர்வு எழுதுங்கள்

மத்திய அரசின் மத்திய தேர்வாணையம் (UPSC) நிறுவனத்தில், பொறியியல் பட்டம், பட்டமேற் படிப்பு முடித்தவர்களுக்காக இந்தியப் பொறியியல் பணித் தேர்வு நடத்தப்படுகிறது. ஐ.ஈ.எஸ் (I.E.S) எனப்படும் இத்தேர்வில் தேர்ச்சிப் பெற்றால் இந்திய ஆட்சிப்பணி (IAS, IPS, IFS)க்கு இணையான சம்பளம் வழங்கப்படும்.

தேர்வு (B.E.) முடிவு வந்ததும் எழுதினால் நல்ல மதிப்பெண் பெறலாம். 75% நீங்கள் பட்டப் படிப்பில் படித்த கேள்விகளே இடம்பெறும். எனவே நல்ல மதிப்பெண் பெறலாம். பி.இ. (சிவில், மெக்கானிக்கல், இஇஇ, ஐடி, இசிஇ) பாடத்தில் படித்தவர்கள் இத்தேர்வை எழுதலாம்.

முதன்மைத் தேர்வு ஏப்ரலில் நடக்கும். முதுநிலை தேர்வு டிசம்பரில் நடக்கும். செப்டம்பரில் விண்ணப்பித்து படிக்கத் தொடங்கி விடவேண்டும். வயது 21. எம்.எஸ்.சி (வயர்லெஸ், எலக்ட்ரானிக்கல், ரேடியோ இயற்பியல்) படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இந்திய இரயில்வே, இராணுவம், தளவாடத் தயாரிப்பு, நில அளவைத் துறையில் உயரியப் பதவி இந்தியா முழுவதும் உங்களுக்குத் தயாராக இருக்கிறது.

**முழு விவரம் பெற,**

இந்திய பப்ளிக் சர்விஸ் கமிஷன்,
இந்திய அரசு,
UPSC, Dolpur House,
Shehjahan Road, New Delhi - 110069,
Phone : 011-23098543, 23098591,
Enquiry Phone : 011-23381125,
Website : www.upsc.gov.in

## கண்ணீர் அஞ்சலி




ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் அறங்காவலர் மாதாவரம் திரு.P.மோகன் ரெட்டி அவர்களின் தாயாரும், மறைந்த தெய்வத்திரு. K.பெருமாள் ரெட்டியார் அவர்களின் மனைவியுமான திருமதி.P.மங்கலட்சுமி வயது 90 அவர்கள் கடந்த 13.06.2024 வியாழன் அன்று வைகுண்டபதவி அடைந்தார்.

அவரது மறைவுக்கு ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

தாயாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவிக்கிறோம்.

### 10 மற்றும் +2 வகுப்பு மாணவ–மாணவிகளே!

10 மற்றும் 12ம் வகுப்பு மற்றும் CBSE தேர்வு முடிவுகள் வெளிவந்துள்ளன. இதில் அதிக மதிப்பெண் பெற்றுள்ள நம் ரெட்டி சமூக மாணவ, மாணவிகளின் விவரங்கள் அடுத்து வரும் ரெட்டி மலர் இதழில் புகைப்படத்துடன் வெளியிட இருக்கிறோம். எனவே 10ம் வகுப்பில் 450 மதிப்பெண்களுக்கு அதிகமாக மற்றும் 12ம் வகுப்பில் 550 மதிப்பெண்களுக்கு அதிகமாக பெற்றிருக்கும் குழந்தைகளின் புகைப்படம் மற்றும் மதிப்பெண் சான்றிதழின் நகலை ரெட்டி மலர் அலுவலகத்திற்கு **31.07.2024**க்குள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். மாணவ, மாணவிகள் பயின்ற பள்ளி, பெற்றோர்களின் பெயர் [தாய், தந்தை] மற்றும் முகவரி, தொலைபேசி எண் குறித்த விவரங்களுடன் மதிப்பெண் பட்டியல் Xerox நகலையும் தவறாது அனுப்பி வைக்க கேட்டுக்கொள்கிறோம். நம் குழந்தைகளை கல்வித்துறையில் ஊக்கப்படுத்தவே இந்த வெளியீடு. எனவே தங்களின் குழந்தைகள் குறித்த விவரங்களை தவறாமல் ரெட்டி மலர் அலுவலத்திற்கு அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

வெளியீட்டாளர்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.**

**உங்கள் வருங்காலத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். உங்கள் நிகழ்காலத்தில் நல்லவிதமாக செயல்பட்டால் உங்கள் வருங்காலம் தன்னால் மலரும்**

*உங்களால் முடியாது என்று நீங்கள் நினைக்கும் ஒன்றைச் செய்யுங்கள். தோல்வியுறுங்கள். மீண்டும் முயலுங்கள். இரண்டாவது முறை இன்னும் சிறப்பாகச் செய்யுங்கள். பெரிதாக அடிபடாதவர்கள் பெரும் சிகரங்களில் ஏறாதவர்களே. இது உங்கள் தருணம். அதை சொந்தமாக்கி கொள்ளுங்கள்.*

# மரங்கள் மக்கள் இயக்கம் விளாத்திகுளம்




விளாத்திகுளத்தில் மரங்கள் மக்கள் இயக்கம் சார்பாக விவசாயிகளிடையே கிராமங்களில் வளர்ந்துள்ள சீமை கருவேல மரத்தை அகற்றி பயன்தரும் நாட்டு மரங்களை பயிர் இடுதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பல்வேறு பகுதிகளில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்க்கண்டேயன் அவர்கள் முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறார்.

இந்த அமைப்பு சார்பாக விவசாயிகளுடன் வேப்பமரம் பயிர் இடுதல் குறித்து நடைபெற்ற கலந்தாய்வு கூட்டம் 30.06.2024 அன்று விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம் புளியங்குளம் கிராமத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்க்கண்டேயன் அவர்கள் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றி பேசும்போது, "மனிதனாக பிறந்த நாம் அனைவரும் மரம் நடவேண்டும். விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அவர்களது சொந்தக்காடுகளில் வேப்பமரங்களை நடவேண்டும். விளாத்திகுளத்தை முன்மாதிரியாக மாற்றவேண்டும் என்பதே என் இலக்கு. 5 ஆண்டுகளில் ஒரு கோடி மரம் வளர்க்கும் பணியினை நிறைவேற்றுவதில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறேன். பிரபஞ்சத்தை சிறந்த இடமாக தயார்படுத்தினால், எதிர்கால சந்ததிகளின் வாழ்க்கைக்கு ஆதாரமாக அமையும். வேப்ப மரத்தை தேர்ந்தெடுப்பதன் நோக்கம் மற்ற மரங்கள் நடப்படும் போது அதை கிராம மக்கள் விறகு, வீடு கட்டுதல் போன்றவற்றிக்காக வெட்டுவார்கள். ஆனால் மக்களின் நம்பிக்கைகளில் ஒன்றான வேப்பமரத்தை புனிதமாக கருதுவதால் அதை வெட்டுவதில்லை. வேம்பு மருத்துவ நோக்கத்திற்காக மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது" என்றார். பின்னர் வேப்ப மரத்தின் பயன்கள் குறித்து அக்ரி துறையைச்சார்ந்த திரு.ராமமூர்த்தி அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

நிகழ்ச்சியில் விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் திரு.சூர்யா அய்யன்ராஜ், வடசென்னை ரெட்டியார் சங்க செயலாளர் திரு.M.P.சோலையப்பன் ரெட்டியார் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். மேலும் மரங்கள் அதிகமாக நடக்கூடிய கிராம ஊராட்சிகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தன்னார்வலர்களுக்கு நினைவு பரிசுகள் மற்றும் ஊக்கத்தொகை வழங்கினார்.

நிகழ்ச்சியில் புளியங்குளம் கிராமத்தில் மரக்கன்றுகள் நட்டு மிகச்சிறப்பாக செயல்படுத்திய ஊராட்சி மன்றத் தலைவி திருமதி.சேலலட்சுமி ராஜகோபால் அவர்களுக்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்க்கண்டேயன் அவர்கள் கௌரவித்து பரிசு வழங்கினார்கள்.

தகவல் : M.P.சோலையப்பன், சென்னை


## ரெட்டி மலர் சந்தா படிவம்

| சந்தாவிற்கான கால அளவு | சந்தா தொகை | (✓) டிக் செய்யவும் |
|---|---|---|
| 1 ஆண்டு | 180/- | |
| 3 ஆண்டு | 500/- | |
| 15 வருட சந்தா | 2500/- | |

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

தொலைபேசி : ..............................................................

நான் இத்துடன் ............ வருட சந்தா / 15 வருட சந்தா தொகை ரூ...................... டிடி / மணியார்டர் / காசோலை மூலம் Reddy Elainger Peravai (ரெட்டி இளைஞர் பேரவை) என்ற பெயரில் எடுத்து இணைத்துள்ளேன்.

நாள் : ____________ சந்தாதாரரின் கையொப்பம் : ______________________

**சந்தா தொகையை அனுப்ப வேண்டிய முகவரி**

**ரெட்டி மலர்**

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை – 600 083. 044 - 2485 3333, 9688877700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Online Website : www.reddymalar.com

**ACCOUNT PAYEE : REDDY ELAINGER PERAVAI**

BANK NAME : **INDIAN BANK**

BRANCH : **JAFFERKHANPET,**

A/C. NO. : **7105534900**

IFSC CODE : **IDIB000J019**

# போதை அரக்கனை அழிப்போம்

விழிப்புணர்வு கட்டுரை

போதைப்பொருட்கள் மனித சமுதாயத்தை பெரிதும் சீரழித்து வருகிறது என்பதனை தினமும் காண்கிறோம். வன்முறை, திருட்டு, கொலை, கொள்ளை என அனைத்திற்கும் மூலமாக உள்ளது. போதைப்பொருட்கள் என்பன–கஞ்சா, ஹெராயின், மெதாம் பீட்டமைன், MDMA, LSD, கேட்டமைன், சாராஸ் போன்ற **narcotics** போதைப் பொருட்களையும், கள், சாராயம், பீர், பிராந்தி, ரம், விஸ்கி, ஒயின் போன்ற **திரவ மது** அயிட்டங் களையும் உள்ளடக்கியது.

இங்கு மதுவை விட மிகமிக அபாயகரமான நார்க்காட்டிக்ஸ் போதைப்பொருட்களால் விளையும் சீரழிவைப்பற்றி காண்போம். போதைப்பொருட்களுக்கு அடிமையாகுபவர் களில் பெரும்பாலானோர் 17 முதல் 26 வயது வரை உள்ள இளைஞர்களே. இவர்கள் சக நண்பர்களுடன் மகிழ்ச்சிக்காகவும், புதுமை காணும் ஆர்வத்திலும், மன அழுத்தத்திலிருந்து விடுபடவும் போதைப்பொருட்களைப் பயன்படுத்தத் துவங்குகின்றனர். இதில் Drug pushers/Drug peddlers எனப்படும் விற்பனை கயவர்களின் பங்கு பெரிதும் உள்ளது. முதலில் சில நாட்களுக்கு இலவசமாகவும், பின்னர் புதிய உறுப்பினர்களை குழுவில் சேர வைத்தால் கைமாறாக இலவசமாகவும் அளிப்பார்கள். இப்படி நாசவலை விரிவடையும். பயன்படுத்த ஆரம்பித்த சில வாரங்களில் அடிமையாகிவிடுவார்கள். பின்பு மீளவே முடியாது காசு கொடுத்துதான் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள். இதில் பெண்களும் வீழுகின்றனர். மதுவைப் போலன்றி போதைப் பொருட்களுக்கு **அடிமை யாதல் சில வாரங்களிலேயே** முடிந்து விடுகிறது.

முதலில் நண்பர்களுடன் பார்ட்டிகளில் பயன்படுத்தத் துவங்கி, மீள முடியாத அளவில் மன உந்துதல் வந்த பிறகு, நண்பர்கள் இல்லாவிடினும் தனிமையில் பயன்படுத்த தொடருகின்றனர். இந்த நிலைக்குப்பிறகு ஒவ்வொரு நாளும் உடலாலும், மனதளவிலும் போதை இல்லாமல் இருக்க முடியவில்லை. இவ்வாறு போதைப்பொருள் பழக்கம் மனிதனை அடிமையாக்கி, நோயாளியும் ஆக்கி அவனது உடல், மனம், சமூக அந்தஸ்து ஆகிய மூன்றையும் சிதைத்து முடிவில் அவனையே மாய்க்கிறது, சார்ந்த குடும்பமும் நாசமடைகிறது.

Times of India (10.5.24) நாளிதழில் வெளியான செய்தி. சென்னையில் போதைப்பொருட்கள் கடைகளில் விற்கப்படுவது மட்டுமல்லாமல்,



தற்போது அவற்றை ஆன்லைன் மூலமாகவும் போதை ஆசாமிகள் பெறுகின்றனர். ஆன்லைனில் வினியோகிப்பவர்கள் மென் பொருள் (software) திறன்களில் திறமைசாலி களாக இருப்பதால் அவர்களை கண்டு பிடிப்பதும் சிரமமாக உள்ளது. சென்னையில் 50 கிராம் கஞ்சா பாக்கெட் ரூ.3000 முதல் ரூ.4000 வரை விலை போகிறது. எல்எஸ்டி, ஹெராயின் ஒரு கிராம் ரூ.2000 முதல் ரூ.5000 வரை விலை போகிறது.

கஞ்சா பொருட்களால் தோன்றும் போதை யானது அவற்றின் தரம் மற்றும் அளவை பொறுத்து இரண்டு மணி முதல் 5 மணி நேரம் வரை நீடிக்கிறது. ஹெராயின், எல்.எஸ்.டி போன்றவை குறைந்தது 5 மணி நேரம் முதல் சில நாட்கள் வரை போதைத் தன்மையை நீடிக்கச் செய்கிறது.

போதைப்பொருட்களைப் பயன்படுத்தும் முறைகளும் வேறுபடுகின்றன. சிகரெட்டில் உள்ள புகையிலை துகள்களை நீக்கிவிட்டு கஞ்சா துகள்களை துருத்தி புகைப்பது, போதைப் பொருட்களில் சிலவற்றை சூடாக்கி வெளிவரும் புகையை நுகர்வது, ஊசி மூலம் இரத்தத்தில் செலுத்திக் கொள்வது, வாய் வழியாக உட்கொள்வது என பல வகையாக உள்ளன.

தமிழகம் முழுவதும் பட்டிதொட்டி வரை பரவியுள்ள இந்த புதிய போதைப்பொருள் கலாச் சாரத்தினால் இளைஞர்கள் பெரும் அளவில் தங்கள் வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்கின்றனர். பல்வேறு **உடல்நல பாதிப்பு களை** அடைகின்றனர். அதாவது அடிமை யாதலுடன் ஹலுசினேஷன் (Hallucination புலன்கள் மாறி செயல்படுதல்– உதாரணமாக ஒரு பாட்டைக்கேட்டு விட்டு, பார்ப்பதற்கு போட்டோ அழகாக உள்ளது என்பார்), இதய கோளாறுகள், ரத்த அழுத்த நோய், உடல் எடை குறைதல், பக்கவாதம், நுகர் உணர்ச்சி (smelling)

இழத்தல், நினைவுகள் பாதிப்பு, மனநோய், நரம்பு மண்டலம் செயலிழப்பு, வன்முறையில் நாட்டம், தற்கொலை எண்ணம் தோன்றுதல் ஆகிய பாதிப்புகள் உருவாக்குகின்றன. இப்படி இளம் வயதிலேயே எதிர்காலத்தை இழந்து பாழாகின்றனர்.

இந்தப் பேரழிவை தடுப்பதில் அரசு தன் பங்காக போதைப் பொருட்கள் விநியோக, விற்பனையில் ஈடுபட்டுள்ள குற்றவாளிகளைத் தீவிரமாக கண்காணித்தல், மற்றும் தவறு செய்யும் அனைவரையும் ஒருவர் விடாமல் தண்டித்தல் போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தற்போதுள்ள நார்க்காட்டிக்தடுப்பு சட்டங்கள் மிகக் கடுமை யானவை. (கடுமையான தண்டனை என்பதை விட, தவறுக்கு தண்டனை நிச்சயம், இனி தப்ப முடியாது என்ற நிலை உள்ளபோது தான் குற்றங்கள் குறையும் – certainty of punishment is better than severity of punishment).

பொதுமக்களாகிய நீங்களும் விழிப்புணர்வைப்பெற்று பெற்றோர்களாக/தனிநபர்களாக ஆற்ற வேண்டிய பங்கு பெரிதும் உள்ளது. அவற்றைக் காண்போம்.

உங்கள் இளமைக் காலத்தை விட உங்கள் குழந்தைகள் இப்போது அதிக தாக்கத்திற்கு உட்படுகிறார்கள். அதிக தேவையற்ற செய்திகளைப் பெறுகிறார்கள். அக்காலத்தில் கூட்டுக்குடும்பத்தில் உங்களுக்கு கிடைத்த ஆதரவு தற்போது உங்கள் குழந்தைகளுக்கு இல்லை. உங்கள் அரவணைப்பு அவர்களை உடல், மனம் மற்றும் உளவியல் ரீதியாக பலப்படுத்தும். **விடலைப்பருவம் கடினமான பருவம்.** இந்நிலையில் நண்பர்களுடைய ஆதிக்கத்திற்கு எளிதில் ஆளாகின்றனர். போதைப் பொருட்களுக்கு உங்கள் பிள்ளைகள் அடிமை யாகாமல் இருக்க உறுதி செய்யவேண்டியவை–

- ★ உங்கள் பிள்ளைகளையும், அவர்களின் உணர்வுகளையும் புரிந்து கொள்ளுங்கள்,
- ★ தினமும் அவர்களுடன் சிறிது நேரம் இருப்பதை வழக்கப்படுத்திக்கொண்டு அவர்களுடைய பிரச்சனைகளை தெரிந்து கொள்ளுங்கள்,
- ★ அவர்களுடைய செயல்பாடுகளில் ஈடுபடுங்கள்,
- ★ அவர்களுடைய பலத்தை அறிந்து முழு திறனுக்கு உழைக்க ஊக்கப்படுத்துங்கள்,
- ★ போதைப்பொருட்கள் மற்றும் அதன் நடமாட்டத்தை பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

போதைப்பொருட்களில் உங்கள் மகன் நாட்டம் செல்கிறதா? அவனுடைய நடவடிக்கைகளில் தோன்றும் மாற்றத்தை கண்காணியுங்கள். அவசரப்பட்டு முடிவுக்கு வந்துவிடாதீர்கள்.

- ★ விளையாட்டு மற்றும் அன்றாட பணிகளில் ஆர்வம் குறைதல்
- ★ பள்ளி/கல்லூரிகளில் குறைவான வருகை
- ★ பழைய நண்பர்கள் மறைந்து புதிய நண்பர்கள் தோன்றுதல், தனிமையை விரும்புதல், கழிப்பறைகளில் அதிக நேரம் இருத்தல்
- ★ காரணமின்றி கைசெலவிற்கு அதிக பணம் கேட்டல்.
- ★ வீட்டிலுள்ள பணம், பொருட்கள் காணாமல் போதல்.
- ★ திடீர் பரபரப்பு ஏற்படுதல், எதையோ இழந்தார் போல் இருத்தல், அதிக வியர்வை, மனநிலை (Moods)யில் திடீர் மாற்றம், எரிச்சலடைதல், நினைவாற்றல் பாதிப்பு, மனம் ஒருமை படுத்தலில் பாதிப்பு
- ★ உடல் எடை குறைதல், ஆகாரம் குறைதல், நடுக்கம், நடையில் தளர்ச்சி
- ★ கண்கள் சிவப்பாதல் மற்றும் உப்பியிருத்தல், பேச்சு குழறுதல்
- ★ சுகமின்மை, வாந்தி உடல் வலி, தூங்கி வழிதல், மந்தம்
- ★ உடலில் புதிய ஊசி வடுக்கள், துணிகளில் இரத்தக்கரை,
- ★ இன்ஜெக்ஷன் ஊசி மற்றும் வித்தியாசமான பாக்கெட்டுகள் வைத்திருத்தல்.

இத்தகைய அறிகுறிகள் நீடித்து காணப்பட்டால் போதைப்பொருட்களுக்கு அடிமையாகிவிட்டது தெளிவு. இந்த சூழலில் பதட்டம் அடைதல், கோபமடைதல், உங்களையே நொந்துகொள்ளுதல் வேண்டாம். நிதானமாக பிரச்சனையை அணுகுங்கள்.

போதைப்பொருட்களுக்கு **அடிமையாதல் என்பது ஒரு நோய்.** இப்போது இந் நோயிலிருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. இந்த சமயத்தில் உங்களுடைய ஆதரவு, பொறுமை, புரிந்து கொள்ளும் தன்மை அவனுக்கு தேவை. உரிய வல்லுனர்களின் உதவியை நாடுங்கள். சிகிச்சை மையங்களுக்கு (De-addiction Centres). அழைத்துச்செல்லுங்கள் அவனை இந்த நோயிலிருந்து குணப்படுத்த முடியும்.

**முயற்சி திருவினையாக்கும்.**

**Prevention is better than cure.**

R. இராஜசேகரன், விழுப்புரம்

# ஆன்மீக வழியில் அமைதி

மனிதனின் கர்மாக்கள் அனைத்தும் ஜடமானவை. கடவுள் என்பவர் யாருக்கும் புரியாத அறிவுத் தத்துவம், ஞானதத்துவம். அவரே நம் அனைவருக்கும் பாவபுண்ணியக் கர்மாக்களின்படி நமது வாழ்க்கைக்கு வழி காட்டுபவர். அதாவது ஜடமான கர்மாக்களுக்கு பாவ புண்ணியங்களை வகுத்து வழிகாட்டுபவர் என்று சாஸ்திரம் கூறுகிறது. பொதுவாக நமது துன்பங்களுக்கு துயரங்களுக்கு காரணம் இன்னதென்று அறிந்து மனிதன் செயல்பட்டாலே அவன் மனதில் உள்ள பாதி துன்பம் குறைந்து விடும்.

கர்மா தத்துவம் என்ன கூறுகிறது என்றால் மனிதன் அறிந்தோ அறியாமல் செய்த பாவங்களுக்குத்தண்டனையை அல்லது துன்பத்தை அவன் அனுபவிக்கிறான். மனிதர்கள் துன்பங்கள் துயரங்களை அனுபவிக்கும்போது அவை நமக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை என்று நினைக்காமல் அது நம்மை நல்வழிக்கு நடத்திச் செல்வதற்கு வழிகாட்டும் பிராயச்சித்தம் அல்லது சத்தியசோதனை என்று நினைக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

நாம் உலகில் வாழும்போது மனம், வாக்கு, செயல் மூன்றிலும் தூய்மையுடன் வாழ்ந்தால் நமது எதிர்காலத்தில் கர்மா தத்துவப்படி புண்ணியத்தின் பலன்களை அடையலாம் என்று கர்மா தத்துவம் கூறுகிறது. கடந்த காலத்தில் உள்ள பாவ புண்ணியப் பலன்களை நிகழ்காலத்திலும், நிகழ்காலப் பாவ புண்ணியப்பலன்களை எதிர் காலத்திலும் பெறலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது எதிர்கால பாவ புண்ணிய கர்மா பலன்கள் நாம் செய்யக்கூடிய கர்மவினைகளின் மூலம் உருவாகின்றன.

சிலபேர் மனம், வாக்கு, செயல்பாடுகள் மூலம் அதர்ம வழியில் சென்றாலும் அவர்கள் வசதியா–கவும் துன்பமில்லாமல் இன்பமாக வாழ்கிறான் என்பதையும், அதேபோன்று தர்ம வழியில் சென்றவன் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவவிக்கிறான் என்பதையும் நாம் உலகில் பார்க்கிறோம். இவற்றையெல்லாம் கண்ணுற்ற மற்ற மனிதர்களும் அவனையும் அறியாமல் அவனுடைய மனம் தவறான முடிவுக்கு வந்து விடுகிறது. அதாவது அதர்ம வழியில் சென்றால் நாமும் இன்பமாக வசதியாக வாழலாம் என்று தவறாக எண்ணிக்கொண்டு அதர்ம வழியில் இறங்கி விடுகிறான். இது தவறான முடிவாகும் என்பதை அவன் உணர்வதில்லை.

இதற்கு இந்த கர்ம தத்துவம் என்ன கூறுகிறது என்றால் அதர்ம வழியில் சென்று கொண்டிருக்கும் ஒருவன் நன்றாக வசதியாக இன்பமாக வாழ்கிறான் என்றால் அவன் போன பிறவியிலோ அல்லது இந்த ஜென்மத்திலோ அவன் செய்த புண்ணிய கர்மாவினால் வாழ்வில் வசதியாகவும் இன்பத்தை சுகமாகவும் அனுபவிக்கிறான். அவன் எதுவரையில் அவ்வாறு இன்பங்களையும், சுகத்தையும் அனுபவிக்கிறான் என்றால் அவனது புண்ணிய கர்மப்பலன்கள் தீரும் வரையில் இன்பமாக வாழ்ந்து கொண்டிருப்பான். அதன் பிறகு அவன் இப்போது செய்யும் செய்து



கொண்டிருக்கும் அதர்மங்களுக்கு அவன் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிப்பான் என்று கர்ம தத்துவம் கூறுகிறது.

அதேபோல் மனம், வாக்கு, செயல் மூன்றிலும் தர்மவழியில் நடப்பவன் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிக்கிறான் என்றால், அவன் போன பிறவியிலோ அல்லது இந்த பிறவி யிலோ அவன் அறிந்தும் அறியாமல் செய்த பாவ கர்மாவினால் துன்பங்களை அனுபவிக்கிறான். அவன் எதுவரையில் அவ்வாறு துன்பங்களை துயரங்களை அனுபவிப்பான் என்றால் அவனது பாவ கர்மப்பலன்கள் எல்லாம் தீரும் வரையில் துன்பங்களுடன் துயரங்களுடன் வாழ்வான். அவனது பாவ கர்ம பலன்கள் அனைத்தும் தீர்ந்த பின்பு அவன் இப்போது செய்யும் செய்து கொண்டிருக்கும் தான தர்மங்களுக்கு ஏற்றவாறு அவன் வாழ்வில் இன்பத்தை சுகமாக அனுபவித்து வசதியாக வாழ்வான் என்று கர்ம தத்துவம் கூறுகிறது.

நாம் கர்மா தத்துவத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டால், நமது துன்பங்களுக்கும் துயரங் களுக்கும் மற்றவர்களையோ, நம்மைப்படைத்த கடவுளையோ குற்றம் கூறத்தோன்றாது. நமது இன்பத்துன்பங்களுக்கு நாமே பொறுப்பு என்ற விழிப்புணர்வு வரும்போது நமது மனம் இயல்பாக பக்குவப்பட்டு மன அமைதி அடையும். பொதுவாக உலகவழக்கில் துன்பங்கள், துயரங்கள் வரும் போது, எல்லாம் நம் தலையெழுத்து என்று கூறிக் கொண்டு இருப்போம். அவ்வாறு கூறினாலும் பாவ புண்ணிய கர்மப்பலன்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு முடியாது. நமது இன்ப துன்பங்களுக்கு நாம் செய்த கர்மவினைகள்தான் காரணம் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

கர்மா வினைகள் சஞ்சிதா கர்மா, ஆகாமி கர்மா, பிரார்த்தா கர்மா என்று மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது. ஜீவன்கள் இவ்வுலகில் வாழும் போது அவன் வாழும் காலத்தில் புதிதாக சேரக் கூடிய பாவ புண்ணிய கர்மாக்களுக்கு **ஆகாமி கர்மா பலன்கள்** என்று சாஸ்திரம் கூறுகிறது. இது முற்றும் துறந்த ஞானிக்கும், உலக வாழ்வில் ஈடுபட்டிருக்கும் அஞ்ஞானிக்கும் பொருந்தும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஒரு ஞானி அவர் ஞானநிலை அடைவதற்கு முன்பாக அஞ்ஞானியாக வாழ்ந்திருக்கலாம். அப்போது அவர் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்றவாறு கர்ம பலன்களை இன்ப துன்பங்களை

ஞானநிலை அடைந்தபிறகும் அனுபவிக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக ஒருவர் நாற்பது வயதுக்குப் பிறகு ஞானம் பெற்று ஞானியாகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் முப்பத்தொன்பது வயதுவரை அஞ்ஞானியாக வாழ்ந்தபோது அறிந்தும் அறியாமல் செய்த பாவ புண்ணிய கர்மாக்களுக்கு அவர் இன்பதுன்பங்களை அனுபவிக்கவேண்டும். அவர் அவ்வாறு அனுபவிக்கும் கர்மா பலன்களுக்கு ஆகாமி கர்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. அஞ்ஞானிகள் ஆசை, கோபம், பொறாமை, மோகம் போன்றவற்றினால் தூண்டப்பட்டு அவனையும் அறியாமல் பாவங்களை செய்து அதனால் அவர்கள் கர்ம பலன்களை அனுபவிப்பார்கள். முற்றும் துறந்த ஞானிகள் அவ்வாறு இருப்பதில்லை.

ஞானம் அடைந்தபின் ஞானிக்கு அஞ்ஞானிக்கு உள்ளதுபோல் உலக ஆசை, கோபம் பொறாமை, மோகம் போன்றவை இருப்பதில்லை. ஆனால் ஞானியர்கள் உடலளவில் அவர்களையும் அறியாமல் செய்யக் கூடிய பாவங்கள் அதாவது அவர் நடந்து செல்லும் போது அவர் அறியாமல் காலில் மிதிபடும் உயிரினங்கள், அவர் மூச்சு விடும்போது கண்ணுக்குத்தெரியாத உயிரினங்களுக்கு ஏற்படக்கூடிய துன்பங்கள் போன்றவை முற்றும் துறந்த ஞானிகளுக்கு பாவப் பலன்களாக ஏற்படுவதுண்டு என்று சாஸ்திரம் கூறுகிறது.

நாம் உலக வாழ்வில் ஏதாவது ஒரு காரணத்தால் உணர்ச்சி மிகுதியில் மற்றவர்களின் மனம் புண்படும்படி பேசி செயல்பட்டிருப்போம். இதேபோன்று முற்றும் ஞானியர்களுக்கும் ஆகாமி கர்ம பலன்கள் உண்டு. அதாவது ஞானியர்களும் பாவ புண்ணிய கர்மப்பலன்கள் மூலம் வரக்கூடிய இன்ப துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஒவ்வொரு ஜீவனிடத்திலும் ஏற்கனவே உள்ள பாவ புண்ணியங்களின் குவியல்தான் சஞ்சிதா கர்மா என்று கூறப்படுகிறது. இது அஞ்ஞானிகள் முற்றும் துறந்த ஞானிகளுக்கும் சஞ்சிதா கர்மா பலன்கள் உண்டு. இந்த சஞ்சிதா கர்மா பலன்கள் எல்லாம் காரண சரீரத்தில் பதிவாகி விடுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த சஞ்சிதா கர்மா பிரளயத்தில் கூட அழிவதில்லையென்றும். பிரளயம் முடிந்து பிரபஞ்சம் உண்டாகும்போது மீண்டும் ஜீவன்கள் பிறக்கும்போது அவனுடைய பாவ புண்ணியப் பலன்களுக்கு ஏற்ப ஜன்மம் ஏற்பட்டு பாவ புண்ணியப்பலன்களை தொடர்ந்து அனுபவிக்கிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

**சஞ்சிதா கர்மா** என்பது அனைத்து ஜென்மங்களுக்கும் ஏற்படக்கூடிய பாவ புண்ணிய கர்மா பலன்கள் ஆகும். மனித ஜென்மத்தில் அனுபவிக்கும் பாவ புண்ணியப் பலன்கள் சஞ்சிதா கர்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. மனிதனுக்கு எதனடிப்படையில் ஜன்மம் கிடைக்கிறது என்றால் சஞ்சிதா கர்மாவின் அடிப்படையில்தான் கிடைக்கும். அதாவது ஒரு ஜீவன் அதிக புண்ணியம் செய்திருந்தால் மனிதனாகப் பிறந்து வசதியாக இன்பங்களை அனுபவித்து சுகமாக வாழ்வான்.

அதேபோன்று அவன் பாவங்கள் அதிகம் செய்திருந்தால் துன்பப்படுவான் என்று சாஸ்திரம் கூறுகிறது. மனிதன் அதிகமான பாவ கர்மாக்களில் ஈடுபட்டிருந்தால் அவன் மிக அதிகமாக துன்பப்படுவான். அதிகமான புண்ணியக் கர்மாக்களில் ஈடுபட்டிருந்தால் அதிகமாக இன்பங்களை அனுபவிப்பான். அதாவது மனிதன் அதிகமான புண்ணிய கர்மாக்களில் ஈடுபட்டிருந்தால் குறைவான துன்பங்களை மட்டும் அனுபவிப்பான் என்பதை இதன் மூலம் புரிந்துகொள்ளவேண்டும். மனிதர்களுக்கு புண்ணிய கர்மாக்கள்தான் அவன் விரும்பும் தேடும் மன அமைதியைக்கொடுக்கும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

## திரு.விஜய் அவர்கள் மாணவி மோஷிதாவுக்கு ஊக்கத்தொகை, சான்றிதழ் வழங்கல்




| | |
|---|---|
| தமிழ் | 097 |
| ஆங்கிலம் | 091 |
| இயற்பியல் | 100 |
| வேதியியல் | 098 |
| உயிரியல் | 100 |
| கணிதம் | 100 |



MOSITHA.R

செல்லிப்பாளையம் மேல்நிலைப்பள்ளியில் +2 படித்த **R.மோஷிதா** அவர்கள் 600க்கு 586 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர் செல்லிப் பாளையம் திரு.ரங்கராஜ்–ரம்யா அவர்களின் மகளாவார்.

கடந்த வருடம் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழகம் முழுவதும் தொகுதிவாரியாக முதல் இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் சான்றிதழ்களை நடிகரும், தமிழக வெற்றிக் கழக கட்சித் தலைவருமான திரு.விஜய் வழங்கினார். இதில் திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் செல்லிப்பாளையம் கிராம ரெட்டி நலச் சங்கச் செயலாளர் திரு.ரங்கராஜ்–திருமதி.ரம்யா தம்பதியரின் மகள் செல்வி R.மோஷிதா 600க்கு 586 மதிப்பெண்கள் பெற்றதால் சென்னை, திருவான்மியூரில் நடைப்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பரிசுப் பொருளையும், சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். R.மோஷிதாவுக்கு வாழ்த்துகள்.

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

TNEA COUNSELLING CODE **4962**

## COURSES OFFERED

### UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

### PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT STATUS

For 2022 Batch
**95%** Placement

For 2023 Batch
**200+** Offers
**175+** Internship Offers
as on 05th September 2022

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA

95% CONSISTENT PLACEMENT
150+ COMPANIES
625+ OFFERS
15 LPA HIGHEST SALARY



## NEC Special Features

- ARIIA 2021 Band - Excellent 10th Rank (All India Level) Under Private or Self Financial Technical Institutes Category
- Institution's Innovation Council 4 STAR RATING
- DST - FIST Sponsored
- K.R. Innovation Centre
- NewGen IEDC, DST, New Delhi
- NBA Accredited*
- NAAC Accredited with Grade A
- nirf Rank - 169

## FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA Consultancy Services, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN Technologies, Tessolve, wipro, Data Patterns, Mistral, Brakes India Private Limited, Capgemini, Centizen, Elite Constructions, embedUR, vuram, Hexaware, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

COURSES OFFERED

- Civil Engineering
- Mechanical Engineering
- Automobile Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net

COURSES OFFERED

**UG** B.A. - English; B.Com. - Professional Accounting; B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

**PG** M.Sc. - Computer Science; M.Sc. - Micro Biology

# KR Kayaar Exports Private Limited

(Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com



ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்


எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in


## மணமகள்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | G 7378 | 21.06.1996 | MBBS. MD | மகம் | Doctor | Rs.50,000/- Stipend |
| 2 | G 7379 | 02.04.1998 | B.Com. MBA | மிருகசீரிஷம் | Digital Marketer | Rs.3 Lakhs / PA |
| 3 | G 7380 | 22.04.2001 | B.Sc. MBA | ரேவதி | —— | —— |
| 4 | G 7381 | 13.04.1998 | B.A. | சுவாதி | Business | —— |
| 5 | G 7382 | 23.03.2002 | B.Com. MA | திருவாதிரை | Creative Writer | Rs.40,000/- PM |
| 6 | G 7383 | 04.06.2001 | M.Sc. | விசாகம் | Private School Teacher | Rs.20,000/- PM |
| 7 | G 7384 | 13.02.2001 | B.Sc.MS | ரோகிணி | London, UK | Rs.2 Lakhs / PM |
| 8 | G 7385 | 09.10.1998 | B.Com. MBA | கிருத்திகை | —— | —— |
| 9 | G 7386 | 04.04.1993 | B.E. | பூரம் | —— | —— |
| 10 | G 7387 | 26.09.1998 | B.Tech. | அனுஷம் | —— | —— |
| 11 | G 7388 | 02.11.1999 | M.A. | மகம் | Teacher | —— |
| 12 | G 7389 | 15.03.1999 | M.Sc. | அவிட்டம் | Software Engineer | Rs.10 Lakhs / PA |
| 13 | G 7390 | 26.07.2002 | B.E. | அவிட்டம் | Software Developer | Rs.12-14 Lakhs / PA |
| 14 | G 7391 | 18.11.1995 | B.E. M.S. | உத்திரம் | Data Scientist | Rs.16.5 Lakhs / PA |
| 15 | G 7392 | 09.10.1992 | MBBS | சதயம் | Govt. Doctor | —— |
| 16 | G 7393 | 31.10.1994 | B.E. | பூரம் | —— | —— |
| 17 | G 7394 | 19.12.2001 | B.VOC | திருவோணம் | —— | —— |
| 18 | G 7395 | 01.01.1989 | B.E. | சித்திரை | USA | —— |
| 19 | G 7396 | 02.08.1998 | B.E. | அனுஷம் | Governance Senior Analyst | —— |
| 20 | G 7397 | 10.11.1998 | B.E. | பூசம் | Testing Associate | Rs.40,000/- PM |
| 21 | G 7398 | 18.05.1998 | DECE, BCA | அவிட்டம் | Junior Technical Assistant | Rs.25,000/- PM |
| 22 | G 7399 | 28.11.1994 | M.D. | உத்திரம் | Doctor | Rs.1 Lakh / PM |



ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in

## மணமகன்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | B 11067 | 08.02.1997 | B.E. | உத்திரம் | Merchant Navy | Rs.4.65 Lakhs / PM |
| 2 | B 11068 | 17.10.1992 | B.E.MS | மிருகசீரிஷம் | USA | $1,14,000 / PA |
| 3 | B 11069 (Divorcee) | 04.11.1979 | B.E. | பரணி | US Company | Rs.60,000/- PM |
| 4 | B 11070 | 05.09.1994 | B.E. M.E. | மகம் | Entrepreneur | Rs.7.50 Lakhs / PA |
| 5 | B 11071 | 18.03.1998 | B.E. | அனுஷம் | VCC Constructions | Rs.60,000/- PM |
| 6 | B 11072 | 27.11.1996 | B.E. MS | மிருகசீரிஷம் | Data Scientist | Rs.3 Lakhs / PM |
| 7 | B 11073 | 08.04.1991 | B.E. M.S. | உத்திராடம் | Researcher | Rs.24 Lakhs / PA |
| 8 | B 11074 | 23.11.1998 | B.E. | பூராடம் | IT Company | Rs.40,000/- PM |
| 9 | B 11076 | 24.10.1994 | B.E. | மிருகசீரிஷம் | Software | Rs.40,000/- PM |
| 10 | B 11077 (Divorcee) | 28.08.1989 | B.E. | பூசம் | Team Leader | Rs.1,25,000/- PM |
| 11 | B 11078 | 19.03.1997 | M.B.B.S. | பூசம் | Doctor | —— |
| 12 | B 11079 (Divorcee) | 24.02.1990 | B.Tech. M.A. | அவிட்டம் | Own Business | Rs.10 Lakhs / PA |
| 13 | B 11080 | 28.10.1997 | Dip.in Automobile | உத்திரம் | IT Company | Rs.40,000/- PM |
| 14 | B 11081 | 22.02.1991 | B.B.A. | கார்த்திகை | Travels Manager | Rs.25,000/- PM |
| 15 | B 11082 | 02.04.1996 | BDS | பூரம் | Canada | $ 65,000 PA |
| 16 | B 11083 | 14.11.1994 | B.E. | உத்திரட்டாதி | Private Sector | Rs.35,000/- PM |
| 17 | B 11084 | 18.10.1990 | B.E. | சித்திரை | Software Engineer | Rs.1,20,000/- PM |
| 18 | B 11085 | 20.10.1988 | B.E. M.E. | அவிட்டம் | Senior Trainer | Rs.70,000/- PM |
| 19 | B 11086 | 26.09.1995 | B.Tech.M.Tech. | சித்திரை | Private Sector | Rs.30,000/- PM |
| 20 | B 11087 | 07.02.1993 | DECE | மகம் | Sub Register Office TP Camera Operator | Rs.30,000/- PM |
| 21 | B 11088 | 19.05.1995 | B.E. | உத்திராடம் | Builders | Rs.18 Lakhs / PA |
| 22 | B 11089 | 15.06.1988 | B.E. | திருவாதிரை | RTO Department, Govt. Job | Rs.40,000/- PM |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 23 | B 11090 | 14.06.1990 | M.C.A. | அவிட்டம் | Software Engineer | Rs.60,000/- PM |
| 24 | B 11091 (Divorcee) | 22.06.1985 | B.E. MMR, Ph.D. | ஆயில்யம் | Assistant Professor | Rs.1 Lakh / PM |
| 25 | B 11092 | 16.04.1993 | M.E. | அவிட்டம் | Assistant Traffic Engineer | —— |
| 26 | B 11093 | 23.08.1992 | B.E. | மிருகசீரிஷம் | Private Sector | Rs.35,000/- PM |
| 27 | B 11094 | 27.02.1994 | B.E. M.E. Ph.D. | உத்திரம் | Australia | 3000 to 5000 A$ Stipend |
| 28 | B 11095 | 10.10.1995 | B.E. M.S. | அஸ்வினி | Australia | Rs.46 Lakhs / PA |
| 29 | B 11096 | 23.11.1997 | B.E. | பூரம் | Business | —— |
| 30 | B 11097 | 25.06.1996 | B.E. | அஸ்தம் | Singapore | Rs.36 Lakhs / PA |
| 31 | B 11098 | 07.07.1992 | B.E. | சித்திரை | Qatar | Rs.1 Lakh / PM |
| 32 | B 11099 | 10.09.1986 | B.E. | அனுஷம் | Team Leader | Rs.10.5 Lakhs / PA |
| 33 | B 11100 | 07.02.1995 | B.E. | பரணி | Application Analyst | Rs.60,000/- PM |
| 34 | B 11101 | 17.08.1990 | BBA, PGPBF | திருவாதிரை | Software Professional | Rs.22 Lakhs / PA |
| 35 | B 11102 (Divorcee) | 15.06.1988 | B.Com. | திருவாதிரை | RTR Hospital Manager | Rs.1,50,000/- PM |
| 36 | B 11103 | 28.07.1985 | ITI | கேட்டை | Gold Covering Work | Rs.40,000/- PM |
| 37 | B 11104 | 09.10.1995 | M.Tech. | அஸ்வினி | Civil Work | Rs.9 Lakhs / PA |
| 38 | B 11105 | 16.02.1985 | B.E. MBA. | பூராடம் | Business | Rs.1.5 Lakhs / PM |
| 39 | B 11106 | 23.01.1998 | B.A. PGDM FBSB | அனுஷம் | Senior Financial Analyst | Rs.9 Lakhs / PA |
| 40 | B 11107 | 19.03.1988 | B.Tech. | உத்திரட்டாதி | Software Engineer | Rs.2.50 Lakhs / PM |
| 41 | B 11108 | 12.10.1995 | B.E. | ரோகிணி | Private Sector | Rs.50,000/- PM |
| 42 | B 11109 | 01.10.1995 | BDS, MBA | பூராடம் | Dental Doctor | —— |
| 43 | B 11110 | 05.07.1996 | B.E. M.E. PhD | சதயம் | Assistant Manager | Rs.55,000/- PM |
| 44 | B 11111 | 13.04.1990 | B.Tech. MBA | அனுஷம் | Business Development Manager | Rs.16 Lakhs / PA |
| 45 | B 11112 | 13.11.1995 | DEEE | புனர்பூசம் | Agriculture | Rs.25,000/- PM |
| 46 | B 11113 | 31.01.1995 | BCA, MBA | திருவோணம் | Exide Industries | Rs.7-8 Lakhs / PA |
| 47 | B 11114 | 11.06.1994 | B.Tech. | புனர்பூசம் | Deputy Manager, SBI Bank | Rs.17 Lakhs / PA |
| 48 | B 11115 | 19.09.1996 | B.E. | அனுஷம் | Software Engineer | Rs.5 Lakhs / PA |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 49 | B 11116 | 15.12.1990 | B.E. | அனுஷம் | Business | Rs.1 Lakh / PM |
| 50 | B 11117 | 21.10.1995 | BBA, LLB | பூரம் | Advocate | Rs.75,000/- PM |
| 51 | B 11118 | 26.12.1992 | B.E. | உத்திராடம் | Private Sector | Rs.3.5 Lakhs / PA |
| 52 | B 11119 | 06.12.1992 | B.E. | அஸ்வினி | Private Sector | Rs.6 Lakhs / PA |
| 53 | B 11120 | 15.08.1996 | B.E. | மகம் | Software Professional | Rs.95,000/- PM |
| 54 | B 11121 (Divorcee) | 04.12.1984 | B.E. | ரேவதி | TCS | Rs.12 Lakhs / PA |
| 55 | B 11122 | 06.03.1994 | B.E. | மூலம் | Private Company | Rs.22 Lakhs / PA |
| 56 | B 11123 | 14.11.1997 | B.Tech. | பரணி | System Engineer | Rs.7-8 Lakhs / PA |
| 57 | B 11124 | 22.09.1988 | M.Com. | திருவோணம் | Private Company | Rs.40,000/- PM |
| 58 | B 11125 | 19.10.1993 | B.E. | கேட்டை | Senior Software Developer | Rs.2.25 Lakhs / PM |
| 59 | B 11126 | 18.07.1994 | B.Arch. | அனுஷம் | Architect | Rs.80,000/- PM |
| 60 | B 11127 | 08.06.1996 | B.Tech. | பூரட்டாதி | Senior Lead Sltow Producer at Behind woods | Rs.60,000/- PM |
| 61 | B 11128 | 02.06.1997 | B.E. | அஸ்வினி | Singapore | Rs.30 Lakhs / PA |
| 62 | B 11129 | 09.12.1996 | B.Com. | அனுஷம் | Sales Promotors | Rs.30,000/- PM |
| 63 | B 11130 | 15.11.1995 | B.E. MBA | ஆயில்யம் | Deputy Manager | Rs.17 Lakhs / PA |
| 64 | B 11131 | 03.12.1993 | B.E. | புனர்பூசம் | Technical Engineer | Rs.40,000/- PM |
| 65 | B 11132 | 25.11.1991 | B.E. M.S. | புனர்பூசம் | Germany | Rs.48 Lakhs / PA |
| 66 | B 11133 | 10.08.1996 | MBBS, DNB | மிருகசீரிஷம் | Government Doctor | Rs.11 Lakhs / PA |
| 67 | B 11134 | 21.09.1995 | B.Tech. | ஆயில்யம் | Sr.Manager HDFC General Insurance | Rs.22 Lakhs / PA |
| 68 | B 11135 | 02.08.1995 | B.E. M.S. | அஸ்தம் | Australia | A$ 9,500 / PM |
| 69 | B 11136 (Divorcee) | 12.10.1987 | B.E. | மிருகசீரிஷம் | Software Engineer | Rs.6 Lakhs / PA |
| 70 | B 11137 (Divorcee) | 29.08.1992 | B.E. | உத்திரம் | Assistant Manager | Rs.60,000/- PM |
| 71 | B 11138 | 17.10.1992 | B.E. | திருவாதிரை | Regional Technical Manager | Rs.80,000/- PM |
| 72 | B 11139 | 04.04.1994 | B.Com. | உத்திராடம் | Wipro Tech.Leader | Rs.6-7 Lakhs / PA |
| 73 | B 11140 | 21.11.1997 | B.E. | ஆயில்யம் | Govt.Job | Rs.60,000/- PM |
| 74 | B 10971 | 18.03.1997 | B.Tech. MBA | பூசம் | Vietnam | Rs.9 Lakhs / PM |

# KRT CAREER ACADEMY

*Leads you towards success!!!*

( A unit of OPR Memorial Charitable Trust, Chennai)



## ADMISSION OPEN - NEW BATCH START

## PHONE NO : 96888 77722, 73054 24439

No.34A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083,

கே.ஆர்.டி.கேரியர் அகாடமியில் இலவசப் பயிற்சி எடுத்துக் கொண்ட மாணவ, மாணவிகள்
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) நடத்திய
குரூப் II A தேர்வில் வெற்றிப் பெற்று பணி ஆணை பெறுபவர்கள்



## T.RAJARAJAN

TNPSC GROUP I
DEPUTY SUPERINTENDENT OF POLICE (DSP)



**S.SHANMUGA PREETHA**
ASSISTANT
IN REGISTRATION DEPARTMENT



**G. KALAIYARASAN**
SENIOR CO-OPERATIVE SOCIETY AUDITOR



**P. MANJULA**
ASSISTANT IN RURAL DEPARTMENT



**S. SATHYA**
ASSISTANT DEPARTMENT OF HR & C



**V.M.SENTHILKUMAR**
ASSISTANT SUPERINTENDENT OFFICER
HEALTH & RURAL DEVELOPMENT DEPT.



**C. SANTHOSHKUMAR**
ASSISTANT IN REVENUE DEPARTMENT



**G. HEMAMBIGA**
ASSISTANT
IN SCHOOL EDUCATION DEPARTMENT



**C.DEVENDRAN**
ASSISTANT
IN TREASURY DEPARTMENT



**R. BHAVADHARANI**
ASSISTANT
IN EMPLOYMENT DEPARTMENT



**K.VADIVEL**
JUNIOR CO-OPERATIVE SOCIETY AUDITOR



**G. AJITHKUMAR**
ASSISTANT
DEPARTMENT OF HR & C



**K. ABINAYA NACHIAR**
ASSISTANT
CHENNAI HIGH COURT

## FREE COACHING CLASS

## UPSC | TNPSC | TNUSRB | SSC

www.krtacademy.com | KRT CAREER ACADEMY | KRT CAREER ACADEMY | KRT CAREER ACADEMY

REDDY MALAR, Tamil Monthly, RNI No. TNTAM/2006/18783, R.Dis.No.63/2021
Date of Publication : 1st week of Every Month




Printed by S.SUNDAR RAMAN and Published by V.SELVARAJU on behalf of REDDY ELAINGER PEREVAI and Printed at VASAN PRINT MFG CO, 29, Dr.Besant Road, Chennai - 600 014 and Published at New No.34A, Old No.36/1A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083. Editor : R.RAJASEKARAN.